தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, கார்த்திகை 11(26-11-'60). சனிக்கிழமை | இதழ் 24

கீரனே கேள்!



25-9-'60 அன்று வெளி வந்த 'செங்கோல் இதழில், கீரர் என்னும் பேரர், அரிமாவை நோக்கி ஊளையிடும் நரியாப்போலும், புலியைத் தாக்கக் கருதும் பூனைபோலும், திராவிட மொழிநூல் ஆராய்ச்சியாளர் தேவ நேயப் பாவணர் தென்றலில் வரைந் துள்ள 'ஆங்கிலத்தைஅகற்றுவது அறி வுடைமையா ?' என்னுங் கட்டுரையை மறுத்து, ''இவர்கள்தான் மொழித் துறையின் எட்டப்பர்கள்'' என்னும் தலைப்பில் தம்மால் இயன்றவரை தம் இருண்ட மனத்திலுள்ள குப்பை கூளங் களைக் கொட்டி, ஏரணம் (Logic) வர லாறு. மொழிநூல் ஆகிய துறைகளில் எள்ளளவுந் தமக்கறிவின்மையைக் காட்டி மனுதரும முறையில் நடுநிலை திருப்பி, கால்நடை போன்ற கோல் நடையும் நொண்டி, தம்மைத்தாமே இறப்ப இழிவுபடுத்தியுள்ளார். ஆயினும் இருந்தவிடந் தெரியாமற் கிடந்த இத் தமிழ்ப் பகைவர், இத்துணி செயலை நிகழ்த்தியது திடுமெனப் பெயர் பெறு தற்கென்றே தெளிக.

''பேதையரைக் கண்டாற்
பெரியோர் வழிவிலகி
நீ ஙெயோடு போதல்
நெறியன்றே-காதுமத
மாகரத்த யானை
வழிவிலகல் புன்மலந்தின்
சூகரத்திற் கஞ்சியோ சொல்.''

என்னும் நீதிவெண்பாவிற்கேற்ப, அறிவாராய்ச்சியில் இறப்ப இழிந்த கீரனுரைப் பாவாணர் மறுத்தற் கியலா மையால், யானே அப்பொறியிலிக்கு அறிவுறுத்தலை மேற்கொண்டு இம் மறுப்பிறுப்பை விடுக்கத் துணிந்தேன் என்க.

1. ''முதற் கோணல் முற்றுங் கோணல்.'' என்றபடி, எட்டப்பர் என்னும் இனிய இசைப்பெயரை இன்னுவசைப்பெயராக ஆண்டதே, கீரனுரின் கூரின்மையைக் காட்டு கின்றது. கடிகை முத்துப்புலவர், உமறுப்புலவர், முதலிய பல பெரும் புலவரைப் போற்றி நெடுகலும் தமிழ்த் தொண்டாற்றியது எட்டையாபுர வேளகம். பாடகர் சுப்பிரமணிய பாரதியாரும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும் வளர்ந்த இடம் எட்டப்ப வேண்மனையே. இங்ஙனமிருப்பவும், அவ்வேள் குடிப்பெயரைத் தீயகருத்தில் ஆண்டமைக்குக் காரணம், கட்ட பொம்முவை ஆங்கிலப் பேரரசிடம் பிடித்துக்கொடுக்க அற்றை எட்டப்பர் துணையாயிருந்தார் என்பதே.

எக்காலத்திலும் ஒரு நாட்டைக் கைப்பற்றிய, அல்லது ஆளும் பேரரசிற் குக் கட்டுப்பட்டு நடப்பதே சிற்றரசர் கடமையாம். எட்டப்பர் 'ஆங்கிலப் பேரரசிற்குக் கட்டுப்பட்டு உண்மை யாய் ஒழுகினர். கட்டபொம்மு, வினை வலி, தன்வலி துணைவலி, மாற்ருன்வலி ஆகியவற்றைச் சிறிதும் எண்ணுது ஆங்கிலேயரை எதிர்த்து, நாடு துறந்து உயிரும் இழந்தார்.

கட்டபொப்மு குடியிலும், முன்னேர் ஆர்க்காட்டு நவாபிற்குத் திறை செலுத்தித்தான் வந்தனர். சகவீர பாண்டியக் கட்டபொம்முவே ஆங்கிலப் பேரரசை எளிதாகக் கருதி முரட்டுத் தனமாய் எதிர்த்தார். 'வானம் பொழி கிறது ஞாலம் (பூமி) விளைகிறது,

புலவர் தமிழரசு

மன்னவன் காணிக்கு என்ன பகுதி (கிஸ்தி)?'' என்றது பொருந்தாது, அது கட்டபொம்முவையுந் தாக்கக் கூடியதாதலால்.

கட்டபொம்மு, புலவர் போற்றத்தக்க உண்மையான மறவருமல்லர்; போரிற் பகைவனுக்குத் தோற்ருேடி யொளிந்து பிடிபட்டு இழிவான முடிவை எய்தின வர். ஆங்கிலர் கட்டபொம்முவிற்கு அயல்நாட்டினர் எனின், கட்டபொம்மு வும் தமிழர்க்கு ஓரளவு அயல்நாட் டினரே! சந்திர சேகர பாண்டிய னுக்கும் வீர சேகரச் சோழ னுக்கு மிருந்த வழக்கைத்தீர்த்து வைக்க விசய நகரத்திருந்து வந்த விசுவநாத நாயக்கர், குரங்கு பூனைகளின் வழக் கைத் தீர்த்தது போல, இருவர் நாட்டையும் கவர்ந்துகொண்டார். மேலும், ஆரியத்தினுல் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக நசுக்குண்டு வந்த தமிழ் நிலைமையையும் தமிழர் நிலைமையையும் நோக்கினுல், ஆங்கில ஆட்சி தமிழரை ஆரியத்தினின்று மீட்டு நன்மை செய்ததேயொழியத் தீமை செய்யவில்லை என்பதே, நடுநிலை யாராய்ச்சியாளர் கருத்தாம்.

2. ஆங்கிலமே இந்திய ஆட்சிமொழி யாயிருத்தல் வேண்டுமென்று, திரு. (C.) இராசகோபாலாச்சாரியார், வய வர் (Sir) C. P. இராமசாமி ஐயர் முதலிய பல பெரியோர் அடிக்கடி சொல்லியும் எழுதியும்வரவும், அவர்களை யெல்லாம் விட்டுவிட்டுப் பாவாணரை மட்டும் ஏன் கண்டித்து நொண்டியடிக் கிருர் கீரனுர்? ஒருகால், முன்னவரைக் கண்டித்தால் நொண்டியடிக்கவும் முடி யாதென்ற அச்சம் போலும்!

3. பாவணர் கூறுகிறபடி. ஆங்கிலம் உலகமொழி முதலிய பத்துநிலைமைகளை அடைந்திருப்பதைக் கண்ணுரக் கண்டும் காதாரக் கேட்டும், ''உலக மொழியாம், ''அறிவியல்மொழியாம்', என 'ஆம்' என்னும் கேள்விப்பாட்டிறு சேர்த்துக் கிண்டல் செய்வது போற் கிளப்பது, நேர்நின்று காக்கை வெளி தென்றும் கதிரவன் கரிதென்றும் சொல்வது போன்றதே, ஒருகால் இவர்க்கு அகக் கரணமும் குறை பாடுள்ளதுபோலும்!

4. இக்காலை, இரசியர் அறிவியல் ஆராய்ச்சியிலும் அழிபடைப்புனைவிலும் தலைசிறந்திருப்பினும், இதற்கெல்லாம் அடிப்படை ஆங்கிலர் கண்ட நீராவி வலியும் மின்சார வலியுமே என்பதை எவர் மறுக்க முடியும்? கடந்த இரண்டாம் உலகப் போரில், சப்பானில்போட்ட அணு குண்டைக் கண்டு பிடித்த கூட்டறிஞருள் ஆங்கிலரும் ஒருவர் என்பதைக் கீரனுர் இனியே



னும் கேட்டறிக. இன்று இரசியாவிட முள்ள கண்டமீதெறிகுண்டு (I. C. B. M,) அமெரிக்காவிடமுள்ளதே! அமெரிக்க ஐக்கிய நாட்டாருள் அடிப் படையினரும் பெரும்பாலரும் ஆங்கிலர் என்பதை, வாயாடிக் கீரனுர் வரலாற்று வாயிலாக அறிந்துகொள்க.

5. ஆங்கிலர் பண்பாடற்றவரென் றும், ஆங்கில மாதரெல்லாம் ஒரு நாளைக்கு ஒருகணவரோடு கூடிவாழ் பவரென்றும், கீரனுர் கூறுகின்ருர்.

இங்கிலாந்திலுள்ள செய்தித் தாட் கடைகளில், தாள் வேண்டுவோர் தமக்கு வேண்டிய தாளை எடுத்துக் கொண்டு அதற்குரிய காசை அருகி லுள்ள பெட்டியிற் போட்டு விடுகின்றன ரென்றும், இங்ஙனம் கடைக்காரனில் லாமலே செய்தித்தாள் விற்பனை நடக் கிறதென்றும், அங்கு சென்று வந்தவர் சொல்லக் கேட்கின்ருேம். இங்கோ, முழுமுதற்கடவுளை வணங்கும் பெருங் கோயில்களிலும் காணிக்கைப் பெட்டி கட்குப் பல அலிகார்ப் பூட்டிட்டுப் பூட்ட வேண்டியிருக்கிறது. இவற்றுள் எது பண்பாடு ?

பொதுமகளிரும் அலவை (விபசார) பெண்டிரும் எல்லா நாடுகளிலும் இருக் கத்தான் செய்கின்றனர். சிலநாடுகளில் இது மறைவாயும், இருக்கின்றது. ஆங்கிலமாதருட் பெரும்பாலார் நிலைத்த திருமணவாழ்க்கையரே. கணவனிறந்தா லன்றி அவர் மறுமணஞ் செய்வதில்லை. நம் நாட்டில், சில கீழ்வகுப்பாரும் இடை வகுப்பாரும், இன்றும் தீர்வை என்னும் கட்டணத்தைச் செலுத்திக் கணவனையோ மனைவியையோ விலக்கி விட்டு வேண்டும் போதெல்லாம் மறு மணம் செய்து கொள்கின்றனர். உயர் வகுப்புப் பெண்டிரெல்லாம் கண்ணகி யருமல்லர்.

நீலமலையிலும் தெரிசாவிலுமுள்ள சில மலைவாணரிடையே பல்கணவம் (Polyandry) அண்மை வரைபயின்று வந்தது. ஒரே சமயத்திற் பல கணவ ரோடு கூடிவாழ்வதே பல்கணவம்,

"ஞானியாராடும் திருக்கூத்தில் நானும் ஆடுகிறேன் தெருக் கூத்து"

உத்தரவேதம் என்று உயர்த்திச் சொல்லப்படும் மகாபாரதத்தில், ஒரே சமயத்தில் ஐங்கணவரோடு கூடி வாழ்ந்த பாஞ்சாலிவாழ்க்கை எத்துணை சிறப்பாய் எடுத்துரைக்கப்பட்டுள்ளது! மலையாள நாட்டு நாயர் குலப் பெண்டிரும் பண்டை நாளில் பல்கணவம் மேற்கொண்டிருந்த தாகப் பலர் வரைந்துள்ளனர். இன்றும், வேண்டும் போதெல்லாம் கணவனை மாற்றிக் கொள்ளும் உரிமை அப்பெண்டிருக்குண்டென்பர். கேரள நாட்டுத் திரவிடக் குலத்தாருள் நாயர், நாயகம் வாய்ந்தவர் என்பதை அறிதல் வேண்டும்.

6. "சேக்சுப்பியர், செல்லி முதலிய ஆங்கிலப் பெரும் பாவலர் செய்யுட்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் ஆற்றல் பாவாணர்க்குண்டா?" என்று கீரனார் ஒரு கேள்வி கேட்கின்றார்.

கலைத்தலைவன் பட்டம் (M. A.) பெற்றதுமன்றிக் கடந்த முப்பானாண்டுகளாகத் தமிழ்ச் சொற்களஞ்சியங்களையும் ஆங்கில வேர்ச்சொல் லகராதிகளையும் ஆய்ந்து கற்று, மொழிநூற்றுறையில் முழுகிக் கிடந்த பாவாணரை இவர் அறியார் என்பதை இது தெற்றெனக் காட்டுகின்றது. கடலாழத்தை நரி வால்விட்டறிவதுபோல, பாவாணர் ஆங்கிலப் புலமையைத்தம் புல்லறிவால் அளந்தறிகின்றார் கீரனார் என்னும் பேரனார்.

7. பாவாணர் தமிழ்ப்பேச்சு பிறரது போற்கலவை மொழியாக, இருப்பது போற் காட்டியிருக்கின்றார் கீரனார். இது யாம் இதுவரை கேட்டறியாத ஒரு புது நகைச்சுவை நொண்டி நாடகம். மறைமலையடிகட்குப்பின், தனித் தமிழ்ப் போராட்டத்தை நடத்தியும், பிறமொழி கலவாது தூய நடையிற் பேசியும் வருபவர் பாவாணர் ஒருவரே. அங்ஙனமிருந்தும் நீரில் நெருப்புத் தோன்றிற்றென்றார் போல பாவாணர் கலவைநடையிற் பேசுகின்றார் என்றது, அவரைக் கீரனார் அணுவளவும் அறியார் என்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது. ஒருவரது இயல்பையறியாமல் அவரைக் கண்டிக்க முனையலாமா? இங்ஙனம் ஓர் அடாவந்தியை இட்டேற்றத் துணிந்தவர் எது வேண்டினும் சொல்வார், செய்வார். இக்கொண்டித்தனம் கண்டிக்க மட்டுமன்றித் தண்டிக்கவுந் தக்கதாகும். "பிராமணனுக்குப் பின்புத்தி" என்னும் பழமொழிக்கு இவரே சிறந்த எடுத்துக் காட்டு.

8 கீரனார் தம் புன்மதியாற் கட்டியுரைத்த கட்டுரையில் (பொய்யுரையில்), பலவிடத்தும் பாவாணரைத் தமிழ்ப் பகைவராக வெளிப்படையாகவும், தம்மைத் தமிழன்பராகக் குறிப்பாகவும் காட்டியிருக்கின்றார். இது, திருடன் தன்னைத் துரத்திக்கொண்டு வந்த வீட்டுக்காரனைத் தனிப்பட்ட விடத்தில் திரும்பிப் பிடித்துக்கொண்டு, அறியாதவரிடம் தன்னை வீட்டுக்காரனாகவும் வீட்டுக்காரனைத் திருடனாகவும் காட்டுவது போன்றதே. இவ்விருமடித் திருட்டுத்தனம் எத்துணை நேரம் நிற்கும்! கேட்ட கேள்விக்கு விடுக்கும் விடையிலேயே விரைந்து அகப்பட்டுக் கொள்வானே! அறியாதவரிடமே இந் நிலையானால் அறிந்தவரிடம் எந்நிலை! "மறைமலையடிகள் தமிழும் ஒரு தமிழா?" என்று ஒரு தமிழ்ப் பகைவனை அயலான் கேட்டது போன்றதே, பாவாணர் தமிழ்ப் பகைவரென்று கீரன் கூறிய கூற்றினுங் கொடிய கூற்று மென்க.

9. "இளைஞர்களே! எழுந்திருங்கள்! இத்தமிழ்ப் பகைவர்க்கு(பாவாணர்க்கு) அறிவு புகட்ட" என்பதுபோற் பிதற்றுகின்றார் நம் கீழையாரியப் பித்தர், தம் வறுமொழியிறுதியில். இது, இருகாலும் இற்ற சப்பாணி யொருவன் நெடுஞ் சட்டையால், அல்லது நீளாடையால் தன் அரையை மறைத்துக்கொண்டு வழிமேற் செல்லும் வலியானை வாய்கொழுத்து வலியச்சண்டைக்கழைத்து, 'எழுந்து வந்தேனென்றால் எப்படியிருக்கும் தெரியுமா?' என்று வெற்றரட்டு விடுவதுபோன்றதே. இளைஞர் இவருக்கு எங்கேயிருக்கின்றார்? உயர் நிலைப்பள்ளிகட்கும் கல்லூரிகட்கும் இவர் போய்ப் பார்த்திருந்தாலன்றோ, தமிழ் மாணவருள் நூற்றிற்கெழுபது பேர் தி. மு. க. வும், இருபதுபேர் தி. க. வும் என்னும் உண்மை தெரியும்! ஒரு சில பிராமண மாணவரும் அவருக்கடிமையான போலித்தமிழ் மாணவரும் தான் இவரைப் பின்பற்றலாம். அவரும் இவரை ஒரு காற் கண்டபின் பின்பற்றுவரா என்பது பெரிதும் ஐயத்திற்கிடமானதே.

10 ஆங்கிலத்திற் சிறந்த இலக்கிய வளமுண்டெனின் "தமிழில் பெரிய புராணம் இல்லையா? கம்பராமாயணம் இல்லையா?" என்று கேட்கின்றார் கீறிய் குழல் கீர் கீர் என்பது போற் கீரனார். இலக்கியம் என்றால் என்ன வென்பதே இவருக்குத் தெரியவில்லை. பரந்த நூற்கல்வியிருந்தாலன்றோ தெரியும்? குருடன் எப்படி அரசவிழி விழிப்பான்?

இலக்கியம் பொது சிறப்பு என இருவகைத்து. அறநூல் பெருவனப்பு (பெருங்காவியம்), சிறுவனப்பு (சிறுகாவியம்) முதலியன பொது; இசை, நாடகம், கணியம் (சோதிடம்), மருத்துவம், கட்டிடக்கலை முதலியன பற்றியவை சிறப்பு

"ஏரணம் உருவம் யோகம்
இசைகணக் கிரதம் சாலம்
தாரணம் மறமே சந்தம்
தம்பநீர் நிலம் உலோகம்
மாரணம் பொருள் என்றின்ன
மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாள."

என்னும் பழஞ்செய்யுளினின்று சிறப்பிலக்கிய வகைகளை ஒருவாறறிந்து கொள்க.

பேருடுகளில் பல அறிவியற்கலைகள் புதிதுபுதிதாய்த் தோன்றி, மேலும் மேலும் நுண்ணிதாய் விரிந்தும் பிரிந்தும் பல்கிக் கொண்டே வருகின்றன. நீராவியும் மின்சாரமும் ஆளப்பெறும் பொறிகளும் புதுப்புனைகளும் மட்டுமன்றி, இயற்கையாகவுள்ள இருதிணைப் பொருள்களும் மேன்மேலும் ஆராயப் பெற்று, ஏற்கனவே உள்ள நூல்கள் ஒன்றுபலவாகப் பெருகிவருகின்றன. உடல் நூல் என முதலில் இருந்த ஒன்று, தோல்நூல், சதைநூல், அரத்தநூல், முதலியனவாகப் பல்வேறு சினை நூல்களாகக் கிளைத்திருக்கின்றது. இந்நூல்களெல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. இந்திய மொழிகளில் இல்லை.

11. தம் அறியாமையால் ஆங்கிலத்தை அளவிறந்து வெறுப்பதைத் தமிழ்ப் பற்றின் விளைவெனக் காட்ட முயல்கின்றார், வடமொழியும் இந்தியுமாகிய கோல்களால் தமிழன்னையை அடித்தடித்துக் குருதிக்கறை படிந்த செங்கோல் தாங்கி நிற்கும் தமிழ்ப் பகைக் கீரனார் இவர் என்றேனும் மறைமலையடிகள் வழிநின்று கட்டாய இந்தியை எதிர்த்ததுண்டா? குன்றக்குடி அடிகளொடு கூடிக் கோயில் வழிபாட்டைத்தமிழில் நடத்தப் பரப்பியம் (பிரசாரம்) செய்ததுண்டா? ஆரியமகளால் அலைப்புண்டு சொல், நூல், கலை, பண்பாடு முதலிய உறுப்புக்களையும் அணிகளையும் இழந்து குற்றுயிராய்க்கிடந்த தமிழணங்கை, அன்பாக அணைத்துக் காயங்கட்டித் தேற்றித் தெளிவித்தது ஆங்கிலத் தோழியன்றோ!

12. தமிழகத் தமிழ்ப்புலவர்குழுவில் பாவாணரும் ஒருவர் என எள்ளியுரைக்கின்றார் ஏழைக்கீரனார். புலவர் குழுவிற் பாவாணர் இருக்கும் இடம் எத்தகையது என்பது இப்புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டிக்கு இன்னும் தெரியவில்லை. இவர்நிலை எத்துணை இரங்கத்தக்கது!

13. தம் உள்ளத்தில் தமிழ்ப்பற்று ததும்பி நிற்பதுபோற் காட்டிக் கொள்ளும் கீரனார், தம் கட்டுரையில் சில வடவெழுத்துக்களையும் சொற்களையும் வேண்டாது ஆள்கின்றார். ஒருகால் அவர்க்கு நேரான தென்சொல் தெரியவில்லை போலும்!

எடுத்துக்காட்டு :

எழுத்து — வடவெழுத்து—தென்னெழுத்து

பூஜை பூசை
சொல்—வடசொல் தென்—சொல்
புத்தி மதி
துரோகம் இரண்டகம்

14. தருமைமடத்திற் பயின்று தமிழ்ப்புலவர் தேர்வில் தேறியிருப்பதாகத் தெரியும் கீரனார், தமிழுக்கு மாறானதொரு கட்சியைத் தழுவியிருப்பதனாலோ, பரந்த நூலறிவின்மையாலோ, வாயாடிப் பெண்டிர் தெருச்சண்டையிற் கையாளும் வன்சொல் நடைபோல், தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒருவகை இழிநடையைத் தம் கட்டுரையிற் கையாண்டுள்ளார். இது அவருடைய பண்படா வுள்ளத்தையும் தோல்விமனப் பான்மையையும் ஒருங்கே காட்டுகின்றன.

இற்றைத் தமிழ்நாட்டுப் பிராமணரின் முன்னோருள் முதற் கூட்டம் தமிழ்நாட்டிற்கு வந்து நாலாயிரம் ஆண்டுகட்கு மேலாயினும், இன்றும் பிராமணர் முன்னோர் மொழியான வடமொழியைத் தேவமொழியென உயர்த்தியும், தமிழை வழிபாட்டிற்குத் தகாதெனத் தாழ்த்தியும், வருகின்றனர் கடைக்கழகக் காலத்தில் நக்கீரனாரும், இந்நூற்றாண்டிற் பரிதிமாற்கலைஞனுமே தமிழுக்கு உண்மையாயிருந்து தம் தமிழ்ப்பற்றை வெளிப்படையாய்க் காட்டினவர் வயிற்றுப் பிழைப்பிற்காகத் தமிழ்ப் புலவர் தேர்வு தேறினால் மட்டும் போதாது, அறிவுவேறு, அன்புவேறு. வடமொழிக்கு வரையிறந்த வுயர்வும் தமிழுக்கு மிகக் கொடியதாழ்வும் ஏற்பட்டதினாலேயே, கடைக்கழகம் கலைக்கப்பட்டது. பண்டைத்தமிழ்ச் சிறப்பிலக்கியமெல்லாம் இறந்து விட்டன; ஆயிரக்கணக்கான பொருட்கொழுமையுற்ற தூய தென்சொற்களும் இருந்த விடமும் போன விடமுந் தெரியாமற் போயின.

இன்றும், வடசொல்வழங்குவது உயர்வென்றும் தென்சொல்வழங்குவது தாழ்வென்றும், தவறான கருத்துக்கள் புலவர் உள்ளத்திலும் குடிகொண்டுள்ளன. அதனால், சோறு என்றும் தண்ணீர் (நீர்) என்றும் பிறர் முன் சொல்ல உளம்நாணி வாய்கூசி, சாதம் என்றும் ஜலம் என்றும் சொல்கின்றனர்.

ஆங்கில அறிஞர் இந்நாட்டிற்கு வந்து தமிழை ஆய்ந்து, அது வடமொழித் துணையின்றித் தழைத்தோங்கவல்ல தனிமொழியென்றும், வடமொழியும் மக்கள் மொழியே யென்றும், அது தென்மொழியினின்று நூற்றுக்கணக்கான சொற்களைக் கடன் கொண்டுள்ளதென்றும், நடுநிலையாய் நாட்டிச் சென்றனர் மேலும், பிறமொழிகலவாது தூயதமிழிற் பேசுவதையே அவர் பெரிதும் போற்றியுள்ளனர். இங்ஙனம் ஆங்கிலர் தமிழர் கண்ணைத் திறந்துவிட்டதனால், பிராமணர்க்கிருந்த உயர்வு குன்றிவிட்டதே. குலவெறி கொண்ட பிராமணரெல்லாம் ஆங்கில

(10-ம் பக்கம் பார்க்க)



"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 26-11-'60 | இதழ் 24

"முட்டாள்களே"---நேரு

பரந்த கல்வியறிவும், சிறந்த அரசியல் ஞானமும் படைத்த உயர்ந்த தலைவரெனப் பாராட்டப் படுகிருர்; "வறுமை" இந்தியாவின் அருமை முதலமைச்சராகிய பண்டிதர் நேரு.

அணுகுண்டுகள் படைப்பதைத் தடுக்க வேண்டுமென்றும், ஆக்ரமிப்புக்கள் நடப்பதை ஒடுக்க வேண்டுமென்றும், அகில உலகுக்கே அறவுரைகளைத் தரவல்ல வாய்வீரம் படைத்த சமரசப் பிரியர் இவர்.

"உலக சரித்திர'த்தை எழுதிய பெருமையும் புகழும், இவருக்குண்டு. அதனுல், கடந்துபோன அரசியல், அதைக் கட்டியாண்ட அதிபர்கள், அவர்தம் ஆட்சியில் நடந்துபோன வெற்றிகள் தோல்விகள்-விளைவுகள் முடிவுகள்-இவற்றையெல்லாம் தெள்ளத் தெளிய அறிந்து தெளிந்திருப்பார்.

மக்களை முட்டாள்களாகக் கருதிய மன்னர்களுக்குக் கிட்டிய முடிவும், முட்டாள்களை மன்னர்களாகப் பெற்ற மக்களுக்குக் கிட்டிய பலனும் இவருக்குத் தெரியும்.

தெரிந்தும், நாற்பதுகோடி மக்களின் நலனைப் பேணும் முதலமைச்சர் பதவியில் இவர் இருந்தும், நாட்டு மக்களை நோக்கி வெறி நிரம்பிய ஆவேசத்துடன் நீங்களெல்லாம் 'முட்டாள்கள்" என அடிக்கடிக் கூறிவருகிருர்,

இதுவரை, இவரின் முட்டாள் பட்டத்தைப் பெருத எந்த மாநிலமக்களும் இந்தியாவில் இல்லை.

கடந்த 17-11-60-தன்று உத்தரப் பிரதேசத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வேளாண்மைக் கழகப் பல்கலைக் கழகமொன்றைத் திறந்து வைத்து இவர் பேசியபோது, மொழிவழி மாகாணம் கேட்டதினுல் அடக்குமுறைக்குள்ளாகிக் கிடக்கும் அகாலிதளத்தினர் சிலர் எழுந்து "பஞ்சாபிசுபா வாழ்க'! என நேரு முன்னர் முழங்கினர்.

முழங்கியவர்களின் எண்ணம், நேருவுக்கு விளங்கியது. அவ்வளவுதான்—ஆத்திரம் நிறைந்த அவர் வார்த்தைகள் அனலாகப் பறந்தது.

"இவ்வித முழக்கங்களைக் கிளப்புவது, முட்டாள்தனத்தைத் தவிர வேறில்லை."

'பயனற்றவர்களே! இம்மாதிரிக் கூச்சல் கிளப்ப நீங்கள் விரும்பினுல், பஞ்சாபிசுபா எங்கிருக்கிறதென நீங்கள் நினைக்கிறீர்களோ அங்கு செல்லுங்கள்"

இந்தியாவில் இப்படிப்பட்ட முட்டாள்களையும் நாம் சமாளிக்க வேண்டியதிருக்கிறது"

"பஞ்சாபிசுபா உங்கள் கற்பனையில் இருந்து வருகிறது. அது உங்கள் கற்பனையிலேயே என்றென்றும் இருந்துவரும்-இதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்."

இவ்வளவு வெறியுடன் பேசியிருக்கிருர்.

நேருதர்பாரின் ஆணவம் மலிந்த அரசியல் அநீதிகளைப் பொறுக்க முடியாத தன்மான உணர்ச்சி படைத்த சீக்கியர்கள், மொழிவழி மாநிலம் கேட்டனர்,

துப்பாக்கிகளின் துணைகளை நப்பி அரசியல் பரிபாலனம் பண்ணும் பஞ்சசீலப்பண்டிதரின் ஆட்சி, அவர்கள் மீது அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது

தலைவரான பஞ்சாப் சிங்கம், தாராசிங் சிறை வைக்கப்பட்டிருக்கிருர்.

ஆயிரக் கணக்கான அகாலிதளத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தனி பஞ்சாப் மாகாணம் பெறுவதற்காக சாகும்வரை உண்ணுநோன்பிருக்கப் போவதாக அகாலிதளத்தின் சர்வாதிகாரி சந்த்பேடாசிங் அறிவித்து விட்டார்.

இவ்வளவுக்கும் பிறகு 'பஞ்சாபி சுபா வாழ்க!' வென முழங்கியது முட்டாள்தனமான செயல், இப்படி முழக்கமிட்டவர்கள் முட்டாள்கள்.

இதைக் கூறியது, 'மாமேதை" நேரு.

இவர், தமிழர்களைக் காட்டுமிராண்டிகளென்றும் முட்டாள்களென்றும் கூறிவிட்டுச் சென்னைக்கு வந்தபோது, கழகத்தினரளித்த மாபெரும் (!) வரவேற்பை மறந்திருக்க மாட்டார்

விசால ஆந்திரம் கேட்டபோது ஆந்திரர்களின் செய்கையை முட்டாள்தனமானதென்றும், விசால ஆந்திரம் கொடுக்கமுடியாதென்றும் கூறிவிட்டு, பொட்டி ஸ்ரீ ராமுலுவின் பிணத்தைத் தூக்கு முன்னரே, புத்தி புகட்டிய ஆந்திரர்களையும், குண்டூருக்கு வந்தபோதுதான் ஏறிவந்த தனி ரயில் வண்டியை மக்கள் ஓட ஓட விரட்டிக் கல்லாலடித்த சம்பவத்தையும் மறந்திருக்க மாட்டார்.

"பம்பாயை இரண்டாக்கு" என மகாகுஜராத் பரிஷத்தினரும்—மகாராஷ்ட்டிர சமிதியினரும் செய்த உரிமையைக் கிளர்ச்சியை முட்டாள் தனமானது என்று கூறிவிட்டு, அக்கிளர்ச்சியை அடக்க நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பலகணியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பச்சிளஞ் சிசுக்கள் பலரைச் சுட்டு வீழ்த்திவிட்டு—அதன் பிறகு அவர்கள் மத்தியில் பேசச் சென்ற பொதுக் கூட்டத்தில், மூக்குடைபட்டுத் திரும்பியதுடன், பம்பாயைப் பிரித்துக் கொடுத்த தோல்வியையும் மறந்திருக்க மாட்டார்.

இதுவரை இவரால் முட்டாள் பட்டம் சூட்டப்பட்டவர்கள், இவருக்கு வாயாலல்ல, செய்கையால் முட்டாள்பட்டத்தைச் திரும்பச்சூட்டத் தவறவில்லை.

இந்த முறையில், இந்தத் தடவை, இவரால் முட்டாள்ப் பட்டம் சூட்டப்பட்ட பஞ்சாப் சிங்கம் தாராசிங்கின் தொண்டர்களும் இவரால் கற்பனை நாடென வர்ணிக்கப்பட்ட 'பஞ்சாபிசுபா' வை நிச்சயமாகப் பெற்று "யார்முட்டாள்?" என்பதை உறுதி செய்யாது விடப்போவதில்லை. நேருவும் அத்தோல்வியை தழுவாது இருக்கப் போவதில்லை

எதைநேரு முடியாதென்கிருரோ அதை யாரை நேரு முட்டாள்களென்ருரோ அவர்கள் வெற்றியுடன் பெற்று "சாச்சா" நேருவின் பாச்சா" பலியாமையையும் இயலாமையையும் பறைசாற்றுகின்றனர்.

இந்தியாவின் சொந்த மண்ணை 12500 சதுர மைல்கள் விழுங்கிவிட்டான் சீனுக்காரன். அவனுக்குக் கைநீண்டதைக் கண்ட நேருவுக்கு, வழக்கம் போல வாய் நீண்டது. இது 'அற்பத்தனமானகாரியம்' என்று ஆவேசத்துடன் பேசினுர்—கண்டபலன்?

நேருவுக்குக் காவடி தூக்கிச் சேவடிதாங்கக் கடமைப்பட்டவைகள், இந்திய மாநில அரசுகள். அவைகளைக் கட்டியாள்பவரோ காங்கிரஸ் அமைச்சர்கள். அவர்களைக் கட்டியாளும் அதிகாரமோ நேரு பண்டிதர் கையில், கட்டியாள வேண்டியவர்கள் கூட, தனது கட்டளையை மீறி கட்டவிழ்த்துக் கொண்டு செய்கின்ற காரியத்தைக் கண்ட நேருவுக்கு கட்டுக் கடங்காத கோபம் வத்து விட்டது 15 நாட்களுக்கு முன் அவர் போபாலில் பேசியபோது.

"காங்கிரஸ் காரர்கள் பதவிக்காகச் சண்டையிடுவது முட்டாள் தனமான செய்கையாகும்" இது நேரு திருவாய் மலர்ந்து காங்கிரஸ் காரர்களுக்குச் சூட்டிய பட்டம்.

'ஆழப் பிறந்தவர்கள் நாங்கள்-எங்கள் கால்களில் வீழப் பிறந்தவர்கள் நீங்கள்" என்று அதிகாரம் செலுத்துகிற காங்கிரஸ்காரர்களையும் முட்டாள்களென்கிருர்-நேரு.

"உங்களுக்குப் போகம் வேண்டுமென்பதற்காக நாங்கள் சாக வேண்டுமா? என்று நியாயத்திற்காக உரிமைக் குரலெழுப்புபவர்களையும் முட்டாள்களென்கிருர்-நேரு.

என்ருல். அவரைத்தவிற வேறு எவரையுமே அவர் 'விவேகி'யாகக் கருதவில்லை போலும்.

"நீ எந்த அளவால் அளக்கிருயோ, அந்த அளவால்தான் உனக்கும் அளக்கப்படும்"

'யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

"கோபங்கொள்ளும் தலைவனுல் நாடு சேமங்கொள்ள முடியாது"

அவர் முறைப்பதும், இவர் சிரிப்பதும் எதற்காக?
சரவணபவா அன் யூனிட்டியின்
"எல்லாம் உனக்காக"

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

"நீ எப்படி என்னைக் காப்பாற்றினாய்" என மெதுவாகக் கேட்டேன்.

"தண்ணீர் கொண்டு போக ஆற்றுக்கு வந்தேன். அப்போது கரையோரமாக நீங்கள் நீரில் ஒதுங்கியிருந்ததைப் பார்த்து அயர்ந்துவிட்டேன்! பிறகு தைரியமாக நான் உங்களைத் தூக்கி வந்து கரைமேல் கிடத்தினேன். வெகு நேரம் பொறுத்துக் கண்ணைத் திறந்தீர்கள். அப்போதுதான் எனக்கும் நிம்மதி வந்தது. ஒரு உயிரைத் காப்பாற்றிய மகிழ்ச்சி எனக்கு வந்தது" என்றாள்.

"இங்கே நீமட்டும்தான் இருக்கிறாயா அல்லது...வேறு?"

"இல்லை, இல்லை என்னுடன் என் அண்ணன் இருக்கிறார். அவரையும் என்னையும் தவிர இந்தக் குடிசையில் யாரும் இல்லை.

"அவர் எங்கே?"

"சில நாட்களாக வீட்டில் தங்குவதேயில்லை! எனக்கு அதுதான் கவலையாக இருக்கிறது! என் அண்ணன் வராத நாட்களில் நான் தூக்கமின்றி அவரை எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்" என்று அவள் சொல்லும்போது, உடன்பிறந்த பாசம் மிகுந்தது. கண்கள் கலங்கின.

சிறிது நேரம் அமைதி குடிகொண்டிருந்தது அந்தக் குடிசை. அவள் மேல் எனக்கு இன்னும், மதிப்பும் பற்றும் வளர்ந்தது, நன்றி கலந்த பார்வையால் அவளை நோக்கினேன். அவளது வெள்ளை உள்ளமும், கள்ளமில்லாப் பேச்சும் என்னைக் கவர்ந்தன! என் தாயினும் மேலாக என்னைப் பேணி உபசரித்ததை நினைத்து அன்புப் பெருக்கால் என் உள்ளம் நிலைகொள்ளாமல் துள்ளியது.

"உன் அண்ணனுக்கு உன்மேல் அன்பில்லையா"

"அதெல்லாம் இல்லை. என்மேல் உள்ள அன்பால் தன்னையே அர்ப்பணிக்கும் குணமுள்ளவர். நானும் அப்படியே என் அண்ணனை மதிக்கிறேன். அவருக்கு அதிகமான கோபம் வந்தால் கொலைகூட செய்துவிடுவார்போல் தோன்றும், ஆனால் அன்புக்கும் அவரிடம் பஞ்சமில்லை"

"உன் பெயரைச் சொல்லவில்லையே,"

"குக்கு" இதைச் சொல்ல ஏன் அவள் தயங்கினாள்? அவள் மலர்முகம் ஏன் சிவந்து படர்ந்தது! ஏன் தன் மார்பகங்களை விரியப் பெருமூச்சு விட்டு, விம்மினாள்! ஏன் அவள் அதரங்கள் துடித்தன! எல்லாம் அவளின் இளமை ஆசைக் கனவுகளின் பிரதிபலிப்புத்தானோ?

"குக்கு" என் வாய் முணுமுணுத்தது

"ஆமாம் நீங்கள் எப்படி அடிபட்டு வீழ்ந்து கிடந்தீர்கள் என்று கூறவில்லையே?" என்று மீண்டும் வினவினாள்.

"எல்லாம் காலையில் சொல்கிறேன். நிறையச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டேன், பிறகு விழித்தபோது! விளக்கு சிறுக எரிந்துகொண்டிருந்தது. குக்கு விழித்துக்கொண்டு வாயிற்படியில் அமர்ந்திருந்தாள். இன்னும் அவளுடைய அண்ணன் வரவில்லை என்று தெரிந்துகொண்டேன். என்னே இவளின் அன்பு!

"மடையன் தன் தங்கையை வீட்டில் தனியாக விட்டுவிட்டு எங்கே போய்விட்டான்? இரவானதும் வீட்டிற்கு வர வேண்டாமா." இதை எனக்கு நானே கேட்டுக்கொண்டு மீண்டும் என் கண்ணை மூடிக்கொண்டேன். என் உடல் வலியை மறந்திருக்க நீண்ட தூக்கத்தை விரும்பினேன். தூக்கத்தில் தானே கவலைகளை மறந்திருக்கிறோம்?

சிறுகதை :

குக்கு என் காதலி.

என். தாமோதரன்.

விடிந்தது! எட்டு மணிக்கு எழுந்தேன்! அவளுடைய உதவியுடன் வெளியே வந்து பார்த்தேன். எங்கும் அடர்ந்த காட்டு மரங்கள். அந்த ஒரு குடிசைக்குப் பக்கத்தில் செடி, கொடிகள் அடர்ந்திருந்தன. எங்கோ தூரத்தில் ஒரு ஊர் தென்பட்டது. பிறகு, அவள் தயாரித்து வைத்திருந்த சூடான உணவையும், தேநீரையும் உண்டுவிட்டு படுத்திருந்தேன். அவளும் வந்து எனக்கு அடுத்து அமர்ந்துகொண்டு "இப்போது வலி எப்படி இருக்கிறது?" என்றாள். அவளுடைய கண்கள் சிவந்திருந்தன. அது, அவள் இரவு பூராவும் கண் விழித்திருந்தாள் என்று எடுத்துக் காட்டிற்று!

"பரவாயில்லை! உன்னுடைய அண்ணன் வரவேயில்லையா?" என்றேன்,

"இது அவருக்கு இப்போது புதிய பழக்கந்தானே!"

"அவருக்கு முக்கியமான வேலை ஏதாவது உண்டா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. எங்களுக்குப் பயிர்த் தொழிலும் சணல் வியாபாரமும்தான் தொழில், அண்ணா அடிக்கடி பக்கத்து ஊருக்குப் போய் பத்திரிகை படித்துவிட்டு வருவார். அப்போதெல்லாம் இரவு ஒரு மணி, இரண்டு மணிக்கு

வீட்டிற்கு வருவார். சில சமயம் வருவதேயில்லை நேற்று அப்படித்தான் காலையில் வந்தார். வெறி பிடித்தவர்போல் இருந்தார். எதைக் கேட்டாலும் எரிந்து விழுந்தார்.

"அஸ்ஸாமில் கொலை! அஸ்ஸாமில் கொலை!" என்று கூறினார்.

"என்ன அண்ணா?" என்றேன். "பேப்பர்லே வந்தது" என்று கூறினார். "நேற்றுக் காலையில் கையில் ஒரு தடியுடன் பக்கத்து ஊருக்குப் போனவர் இன்னும் வரவில்லை" என்று கண் கலங்கக் கூறினாள் அவள்!

எனக்குப் 'பகீர்' என்று விஷயம் புரிந்தது! என் உடல் உதறல் கண்டது, உள்ளம் படபடத்தது, ஆபத்தான இடத்தில் இருக்கிறோம் என்று ஒரு கணம் நினைத்துப் பார்க்கும்போது உள்ளம் நடுநடுங்கியது! படிப்படியாக முந்தின நாள் நடந்த யாவும் என் முன்னே திரையிட்டன!

'என்ன யோசிக்கிறீர்கள்... அண்ணன் வந்துவிடுவார் ஆமாம் நீங்கள் யார்? ஏன் இந்த நிலைக்குள்ளானீர்கள் என்று சொல்லவில்லையே" என்று, சிரித்துக்கொண்டே கேட்டாள். 'விஷயத்தைச் சொல்லலாமா?" சொன்னால் ஆபத்து வந்தால்? என் பேச்சு யாவும் சுத்தமாக வங்காளிபோல் இருக்கவே என்னை வங்காளத்தான் என்று இவள் கருதியிருக்கிறாள்! சற்று சிந்தித்து 'என்ன ஆனாலும் ஆகட்டும் விஷயத்தைக் கூறிவிட வேண்டும்' என்று நினைத்தேன்.

"என்னைப்பற்றி கூறினால் என்னைக் கைவிடாமல் காப்பாற்றுவாயா? உண்மையாகக் கூறு" என்றேன்.

"சந்தேகம் எதற்கு நிச்சயம் நான் இருக்கும்வரை? கவலை இல்லாமல் கூறுங்கள்!" என்றாள்.

என்னைப்பற்றியும், நடந்த விஷயங்களைப்பற்றியும் சுருக்கமாகக் கூறி முடித்தேன். வைத்த விழி வாங்காமல் மிக மிக ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"குக்கு நான் உடனே இவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டும் உன் அண்ணனால் எனக்கும், உனக்கும் எந்தத் தீங்கும் நேர வேண்டாம். உன்னுடைய உதவியை என்றைக்கும் மறக்கவேமாட்டேன் குக்கு!" என்று கூறிவிட்டு எழுந்தேன்.

"இப்போது நீங்கள் எங்கே போவீர்கள்? இந்த நிலையில எப்படி போவீர்கள்? கூடவே கூடாது! இங்கேயே இருங்கள்! அண்ணன் வந்தால் நானிருக்கிறேன்! நான் பேசிக்கொள்கிறேன்" ஒரு பெண் எனக்கு அடைக்கலம் தந்ததை நினைத்து வெட்கப்பட்டேன். அவள் அண்ணன் எப்போது வந்துவிடுவானோ என்று, கணத்திற்குக் கணம் என் உள்ளம் துள்ளிக்கொண்டே இருந்தது. கவலையும், பீதியும் கலந்த இரண்டு நாட்களை எப்படிக் கடந்தேனோ அவள் அரவணைப்பிலா, அன்புப் பணிவிடையிலா? வேளைக்கு வேளை என் நோய் தீர முறை செய்து வந்தாள்! என் உடலும், உள்ளமும் ஒரு புது விதமான தெம்பு பெற்றன! என் காயங்கள் சற்று ஆறுமல் இருந்தன. உடல் பூரண சுகமாக இருக்கக் கண்டேன். அன்று மாலை வெளியே சென்று உலவிவிட்டு வீடு சென்றேன். வீட்டினருகில் வந்ததும் இருவர் பேச்சுக் குரல் கேட்டு அயர்ந்துவிட்டேன். 'அவள் அண்ணன் வந்துவிட்டானா? நான் யாரென்று தெரிந்தால் ஏதாவது விபரீதம் நடக்கும்!' சற்று நின்று யோசித்தேன் குடிசைக்குப் பின்புறம் வந்து, ஒரு பக்கமாக மறைந்திருந்து உரையாடலைக் கேட்டேன்?

"குக்கு, பழிக்குப் பழி! நம்மவர்களை அஸ்ஸாமிலே கொலை செய்தார்கள்! அவர்களை இங்கே கொலை செய்வதுதான் சரி! ஒழிந்தார்கள்! அஸ்ஸாமியர்கள் அழிந்தார்கள்!"

"அண்ணா இதெல்லாம் நமக்கேன் தொல்லை! கொலை! கொள்ளை! எனக்குப் பயமாக இருக்கிறதே! என்னைவிட்டு இனி எங்கும் போகாதீர்கள் அண்ணா!"

"குக்கு, உனக்கு ஒன்றும் தெரியாது! நமது வங்காளிகளை அஸ்ஸாமில் எவ்வளவு கீழ்த்தரமாக ஆக்கிவிட்டார்கள் தெரியுமா? அடிக்கு அடி காட்டினால்தான் மிச்ச மீதியுள்ள வங்காளிகளாவது நிம்மதியாக வாழ முடியும்! நம்முடைய இனத்தார் திக்கற்றவர்கள் இல்லை என்பதை அஸ்ஸாமியர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா! இதெல்லாம் உனக்கெங்கே தெரியப் போகிறது! தெரியாத காரணத்தால் சும்மா கிடக்கிறாய்! என்னையே ஏன் என்று கேட்கிறாய்"

"யாரோ செய்த தவறுக்கு எல்லா அஸ்ஸாமியரும் குற்றவாளிகள் என்று எப்படியண்ணா கூற முடியும்?"

"ஒரு இனத்தின் எந்த மூலையிலே ஓட்டையானாலும், அதனால், அந்த இனம் பூராவும் பாதிக்கப்படுகிறது! யாரோ என்றாயே 'அவர்கள் யார் யார்?' என்று, தெரிவதற்குத்தான் இப்படிப் பழிவாங்குவது குக்கு! நான் போக வேண்டும்! போய்விட்டு நாளை வருகிறேன்!"

"அண்ணா என்னை விட்டுவிட்டுப் போகாதீர்கள் அண்ணா! இனி அங்கெல்லாம் போகாதீர்களண்ணா!" அவள் அழுது கதறினாள்.

"குக்கு, நம் நாட்டுக்கு அவமானம்! நம் நாட்டவருக்குத் துன்பம்! நம் இனத்திற்கே துன்பம் வந்திருக்கும்போது, நீயும், நானும் நிம்மதியாக எப்படி இருக்கமுடியும்? பகைவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்! அவமதித்தவனை அடக்க வேண்டும்!" அவன் ஆர்ப்பரித்தான் - கடலெனக் கொந்தளித்தான்! தன் அருமைத் தங்கையையும் விட்டு ஓடினான் வெறியனாக! நான் அவனை நன்றாகப் பார்த்தேன். என் கன்னத்தில் அறைந்தவன். மண்டையை உடைத்தவன் அவன்தான்! என் உள்ளம் குமுறியது. என் தன்மான உணர்வு சற்று தலை தூக்கியது! எனக்கெதிரிலேயே அஸ்ஸாமியரை இழித்துப் பேசும்போது, என் உள்ளத்தில் என் இனத்துக்காக அவனைப் பழி வாங்க வேண்டும்போல் தோன்றியது! என் உடல் எனக்கு இடங்கொடுக்கவில்லை! சற்று நேரம் பொறுத்து மெதுவாக வந்து வீட்டில் நுழைந்தேன்.

"ஆ...!" என்று கத்திக்கொண்டே என்னைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு போய் ஒரு மூலையில் அமர்த்தி, ஓலைப் பாயொன்றை எடுத்து மூடிவிட்டு வெளியே போய், தன் அண்ணன் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள் குக்கு! எனக்குச் சிரிப்பு வந்தது அவள் செய்கையைக் கண்டு.

"உன் அண்ணன் வெகு தூரம் போய் இருப்பான் பயப்பட வேண்டியதில்லை குக்கு" என்று கூறிக்கொண்டே அவளுக்குப் பின்னால் வந்து நின்றேன்

— 11ம் பக்கம் பார்க்க —

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

''அண்ணா, நீங்கள் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. அந்தப் பையனைப் பற்றித் தங்கம் உயர்வாகத் தான் பேசினாள். அவனிடம் அன்பு தான் காட்டினாள். அவன் தான் உங்கள் மகன் என்று யாருக்கும் தெரியாது. ஆனால், தங்கம் அவனிடம் அன்பு காட்டியது அவன் மேல் உள்ள பிரியத்தால் இருக்க முடியாது; நன்றியறிதலாலோ, இரக்கத்தினாலோதான் ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்றாள் மரகத அம்மாள்.

'மரகதம், என்ன சொல்லுகிறாய்?' என்று மீண்டும் சினக்குரலில் கேட்டார் கயிலாயம்.

அதற்கு மரகத அம்மாள் பதில் சொல்லவில்லை. கந்தசாமி வாத்தியார் தான் பதிலளித்தார்.

''ஐயா, மரகதம் சொல்வது உண்மை தான். தங்கம் வேறொரு பையனைக் காதலிப்பதாகத் தெரிகிறது. அவள் மனத்துக்கு விரோதமாக மணம் முடித்து வைக்க எங்களுக்கு விருப்பமில்லை. ஆனால், உங்கள் விருப்பத்தை மீறி நடக்கவும் எங்களுக்குத் தடுமாற்றமாயிருக்கிறது. இதில் நீங்கள் தான் எங்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டவேண்டும்'' என்றார்.

'யார் அந்தப் பையன் ?'' என்று அதட்டலான குரலில் கேட்டார் கயிலாயம்.

''அவனும் உங்கள் அன்புக்கு பாத்திரமான பையன்தான். ஆனால். சாதாரண நிலையில் உள்ளவன். உங்களாலேயே வாழ்வில் ஒருபடி உயர்ந்தவன்'' என்றார் கந்தசாமி வாத்தியார்.

கயிலாயம் அவன் யாராயிருக்கும் என்று யோசித்துப் பார்த்தார். அவருக்குப் புலப்படவில்லை. கந்தசாமி, அந்தப் பையன் யார்?'' என்று கேட்டார்.

''ஐயா, முருகேச வாத்தியாரின் மகன் நடராசனைத் தான் தங்கம் விரும்புகிறாள்!'' என்றார் கந்தசாமி.

கயிலாயத்தின் முகத்தில் ஒரு குறுநகை நெளிந்தது,

''பொய்! அவனைத் தங்கம் விரும்பவேமாட்டாள். தங்கம் அவனை விரும்பாததையறிந்துதான் அவன் எங்கோ ஓடிப் போய்விட்டான்!'' என்றார் முன் அண்ணாமலைப் பண்டிதராக விளங்கிய கயிலாயம்.

''அப்போது அது உண்மையாக இருக்கலாம். ஆனால், இப்போது தங்கம் அவனைத்தான் விரும்புகிறாள்'' என்று கந்தசாமி வாத்தியார் உறுதியாகக் கூறினார்.

''அப்படியானால், என் மகனுக்கு உங்கள் மகளைத் தர முடியாதென்று சொல்லுகிறீர்கள்! அப்படித்தானே ?'' என்று கோபத்தோடு கேட்டார் கயிலாயம்,

''அண்ணா, உங்களுக்கு நாங்கள் எப்படி மறுத்துரைக்க முடியும். ஆனால்; தங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக அவளுக்குத் திருமணம் நடத்தி வைப்பது நல்லதா? நீங்கள் பெரியவர்கள், நீங்கள் பார்த்துச் சொன்னால் சரி' என்றாள் மரகத அம்மாள் பணிவுடன்.

''மரகதம், நான் சொல்லுவதைக் கேள். தங்கத்திற்கு அடிக்கடி புத்தி மாறாட்டம் ஏற்படுகிறது. அதன் பலன் தான் இது. அவள் உண்மையில் என் மகனைத்தான் காதலிக்கிறாள் என்று நான் நன்றாகத் தெரிந்துகொண்டுதான் திருமண ஏற்பாடு தொடங்க முடிவு செய்தேன். பேசாமல் என் மகனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்க ஒப்புக் கொள். அவள் மேலும்மேலும் குழம்பிக் கொண்டிருக்க விடாதே எல்லாம் நன்மையில் முடியும். இப்போது முருகேச வாத்தியாரின் மகனைத் தேடிப் பிடிப்பதென்றால் சாமான்யமல்ல. இன்னும் தங்கத்தைக் கன்னிப் பெண்ணாகவே வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல'' என்று சொல்லிக்கொண்டு வந்தார் கயிலாயம்.

கயிலாயம் எப்பொழுதும் தங்களுக்குக் கேடு செய்யமாட்டார் என்பது அந்தத் தம்பதிகளின் நம்பிக்கை.

''அண்ணா நீங்கள் பார்த்துச் செய்தால் சரி எதற்கும் தங்கத்தை ஒரு முறை நீங்கள் பார்த்து ... என்று மரகத அம்மாள் சொல்லி வரும்போதே, ''அதெல்லாம் தேவையில்லை. அவளுக்கு வேண்டாததையா நாம் செய்யப் போகிறோம்?'' என்றார் கயிலாயம்.

கந்தசாமி வாத்தியாருக்கு என்ன முடிவு செய்வதென்றே புரியவில்லை. ஒருபுறம் தங்கம்-வாழவேண்டிய பெண் மறுபுறம் அருமை மைத்துனர்-தங்களை வாழவைக்க வந்தவர். இவர்களில் எவர் விருப்பத்தைதான் நிறைவேற்றுவது என்று அவரால் ஒரு தீர்மானத்துக்கு வர முடியவில்லை. எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விட்டார்,

அண்ணனும் தங்கையும் ஒன்றாகக் கூடித் தங்கள் பிள்ளைகளுக்கு மணம் முடித்து வைப்பதென்று பேசி முடித்துக் கொண்டார்கள்.

கயிலாயம் தான் திருமண ஏற்பாடுகளைக் கவனிப்பதாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். கந்தசாமி வாத்தியார் மறுநாள் முருகேசரைச் சந்திக்கும் போது, அவரிடம் நடந்த விஷயத்தைக் கூறினார். முருகேசவாத்தியார் இதைக் கேட்டுப் பெருங் கவலைக் குள்ளானார். தன் வளர்ப்புப் பிள்ளையான நடராசன் வாழ முயலும் போதெல்லாம் ஏதாவது இக்கட்டு வந்து சேர்கிறதென்று அவருக்கு மனத்திற்குள் ஓர் எண்ணம் உண்டாகியது. ஆனால் அதை அவர் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. ''கந்தசாமி, நாம் நினைக்கிறபடியெல்லாம் நடந்துவிட்டால் உலகம் உலகமாகவேயிருக்காது எப்படி யெப்படி நடக்க வேண்டுமோ அப்படியப்படித் தான் எல்லாம் நடக்கும். இதற்காக ஆயாசப்படவேண்டாம்'' என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்பவர் போல் கந்தசாமி வாத்தியாருக்குச் சமாதானம் கூறினார்.

மரகத அம்மாள் தங்கத்திடம். தான் செய்து வைத்திருந்த ஏற்பாட்டைக் கூறியதோடு, சென்னையில் அவள் புதிதாகக் கண்ட இளைஞன். கயிலாயத்தின் மகன்தான் என்றும் கூறினாள்.

தங்கத்திற்குத் தலை சுற்றியது. குழப்பமே யில்லாமல் தன் வாழ்வு கழியாது போலிருக்கிறதே என்று அவளுக்குத் தோன்றியது.

தங்கத்திற்கு ராஜுவின்மேல் பிரியம் ஏற்பட்டது உண்மைதான்' ஆனால், நடராசனைத் திருமணம் செய்து கொண்டு தியாக வாழ்வு வாழ வேண்டுமென்று அவள் உறுதி பூண்டிருந்தாள். ஆரம்பத்தில் குலைந்துவிடும்போல் தோன்றிய அந்தஉறுதி வர வரக் கட்டுக் குலையாத தன்மையை அடைந்துவிட்டது. இனி அந்த உறுதியினின்றும் பிறழ்வதில்லை என்ற திடமான நிலையை அவள் அடைந்திருந்த போது அவள் கேட்ட இந்தத் திருமண ஏற்பாட்டுச் செய்தி அவளைத் திடுக்கிட வைத்தது. தன் அன்னையிடம் அவள் எதுவும் பதில் பேச முடியவில்லை. பித்துப் பிடித்தவள் போல் தன் தாயையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மரகத அம்மாள் தன் மகள் மனத்தில் ஓடிய எண்ணங்களை ஊடுருவிப் பார்க்கக்கூடிய சக்தியுடையவளாக இல்லாததால், தங்கமும் எதுவும் பதில் சொல்லாததால், தங்கள் ஏற்பாட்டுக்கு ஒத்து வந்துவிடுவாள் என்று எண்ணிக்கொண்டாள்.

தங்கம் அதிகமாகக் குழம்பிக் கொண்டிருக்கவில்லை. தன் தியாக நோக்கத்திற்குப் புறம்பாக நடக்கும் இந்த ஏற்பாட்டை நிறுத்தவும் அவளால் முடியவில்லை. கயிலாய மாமா, பணத்தைக் கொடுத்துத் தன்னை விலைக்கு வாங்கிவிட்டதுபோல் நடந்து கொள்கிறார் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. யாரிடமும் அவள் தன் கருத்தைத் தெரிவிக்கவில்லை.

இரவு நேரத்தை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இரவு உணவுக்குப் பிறகு எல்லோரும் படுத்துவிட்டார்கள். தங்கம் தன் படுக்கையில் ஒரே உறுதியான எண்ணத்தோடு சாய்ந்துகொண்டிருந்தாள். அவள் உறங்கவில்லை. நள்ளிரவு நேரம் வந்துவிட்டதே வீட்டிலிருந்த கடிகாரம் பனிரெண்டு தடவை மணியடித்து அறிவித்தது.

தங்கம் மெல்ல எழுந்தாள். பூனை போல் அடிமேல் அடியெடுத்து நடந்தாள். கொல்லைப்புறக் கதவைத் திறந்துகொண்டு பின்புறமாக வெளியேறினாள். மல்லிகைப்பந்தல் நிழலோவியம்போல் அவள் கண்களில் பட்டது. அதைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு வீதிக்கு வந்தாள். இருளில் ஒதுங்கி யொதுங்கி நடந்து வந்தாள். ஊரைத் தாண்டி வந்தாள். ஊர்க் கோடியில், வேலியிட்ட காய்கறித் தோட்டம் ஒன்றினுள் முள் கம்பியை நீக்கிக்கொண்டு நுழைந்தாள். அங்கேயிருந்த கிணற்றின் அருகில் வந்து சேர்ந்தாள். கிணற்றை ஒருமுறை எட்டிப் பார்த்தாள். உள்ளே ஒரே பயங்கரமான கருக்கிருட்டாக இருந்தது. ''தியாக வாழ்வு வாழ எண்ணினேன் ஆனால் உலகம் என்னை அப்படி வாழ விடவில்லை. இப்போது தியாகச் சாவு சாகிறேன்' என்று அவள் முடிவு கட்டிக்கொண்டாள்.

—தொடரும்—

வெண்பாப் போட்டி-11.

★

திருக்குறள் தென்றல் வெண்பா.

திருக்குறளின் எந்த ஒரு செய்யுளையாவது பின்னிரண்டு அடிகளாக வைத்துக்கொண்டு, அதற்கேற்ற முறையில் வரலாற்றிலிருந்தோ இலக்கியங்களிலிருந்தோ, நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்தோ சான்றுகளை முன் இரு வரிகளில் அமைத்து எழுதி அனுப்பவும்,

உதாரணம் செய்யுள் வருமாறு :

நந்தி கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர் சோமேசா—முந்தியொரு
வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை;

—திருக்குறள் சோமேசர் வெண்பா.

சொல்லே ருழவர் பகைகொளக் கூடாது என்பதற்கு, நந்திவர்மன், தன் தம்பி பாடிய கலம்பகத்தால் மாண்ட கதை சான்றாக சொல்லப்பட்டிருக்கிறது.

நண்பர்கள், இதுபோலவே, தென்றலை முன்னிறுத்தி, அதாவது தென்றலே என விளித்து, வெண்பா எழுதி, அனுப்பவும்.

இறுதி நாள் 3-12-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

- 3 -

கண்ணதாசன்

உங்கள் இதயங்கள் மறுபடியும் திறக்கட்டும்.

கேளுங்கள்!

பனிதபாலதோர் ஆலயத்தில் அவன் குடியிருந்தான்.

பூமணமும் பால்மணமும் அங்கே கமழக் கண்டான்.

பளபளக்கும் விதானமும், பளிங்குத் தூண்களும்; கடைந்தெடுத்த வண்ணச் சிலைகளும் அவன் கண்களுக்குத் தெரிந்தன.

கலகலக்கும் மணியோசை அவன் காதுகளுக்குக் கேட்டது.

இலட்சக்கணக்கான பக்தர்கள், அந்த ஆலயத்திற்குள் புன்னகை தவழ உலவிக்கொண்டிருந்தார்கள்.

ஆலயத்தின் கொடிக் கம்பத்தில், கரிய மேகத்தையும் மாலை நேரத்து மேற்கு வானத்தையும்போல் ஒளி பரப்பிப் பறந்துகொண்டிருந்தது கொடி.

இதோ, இந்தத் தெய்வம் நம்மைக் காக்குமென்பாரும், இத்தெய்வம் ஒன்றே இறுதிவரை துணை நிற்கும் என்பாரும் - உலகம் முழுதும் பரவிக் கிடந்தனர்.

அந்த ஆலயத்தினுள் அவன் புகுந்த போது சின்னஞ்சிறு வடிவத்தில் இருந்தான்.

அங்கிருந்த நம்பிக்கை என்னும் தெய்வத்தின் மகிமையால் அவன் வடிவம் வளர்ந்து கொண்டே வந்தது.

அவனது கண்படு தூரம்வரை, அவன் புகழைப் பாடுவோர் விரிந்தனர்.

"அவன் எங்கள் ஆலயத்தைச் சேர்ந்தவன்;

எங்கள் நம்பிக்கைத் தெய்வத்தின் சன்னிதானத்தில், குருபீடங்களில் ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறான்;

அவன் எங்கள் மரியாதைக்குரியவன்," என்றெல்லாம் நீங்கள் அவனைப் பாராட்டுவீர்கள்.

அது, அவனுக்குக் குளிர்ச்சியாகவே இருந்தது.

அவன் மேனி பூரித்துப் பொதுப்பி நின்றது.

ஆயினும், அவன் தன்னை ஒரு கட்டுக்குள் வைத்துக் கொள்ளவே ஆசைப் பட்டான்.

வெற்றிகளால் ஏற்படும் மயக்கங்களில், ஏ தெய்வமே, என்னை வீழ்த்தி விடாதே!

தோல்விகளால் ஏற்படும் கலக்கங்களில், ஏ தெய்வமே என்னைத் துவள வைக்காதே!

ஆசைகளால் ஏற்படும் பரபரப்பில், ஏ தெய்வமே, என்னை ஆழ்த்திவிடாதே!

பயத்தால் ஏற்படும் கோழைத் தனத்தில், ஏ தெய்வமே, என்னைப் பதுங்க வைக்காதே!

—என்று அவன் நம்பிக்கைத் தெய்வத்தை வேண்டிக் கொண்டான்.

உலகத்தைச் சுலபத்தில் உணர்ந்து கொண்ட அவன் தன்னையறிந்து கொள்வதற்கு அரும்பாடு பட்டான்.

உலகுக்கெல்லாம் தானே போய் மருத்துவம் செய்யும் மருத்துவன், தனக்கு நோய் வரும் போது மற்றொரு மருத்துவனை நாடுவதுபோல், அவனும் தன்னடக்கத்தையும் நிதானத்தையும் தனக்குத் தரும்படி மற்றொரு குருபீடத்தை வேண்டிக் கொண்டான்.

அதற்கவன் தேடிக் கொண்ட குருவும் நியாயமானவரே.

முதல்மழையிலேயே பக்குவப் பட்டு விட்ட நிலம்போல், இளமையிலேயே தெளிவும் பக்குவமும் படைத்து விட்ட அவரும், அவனுக்கு அவற்றைப் போதித்தார்.

ஏறி நிற்கும் சபையிலெல்லாம், அவர் குரலே மேலோங்கி நிற்கும்.

இமயவரைமுதல், குமரிக்கரைவரை அவரை அறியாதவரில்லை.

சாம்பல் நிறத்திலொரு சால்வையை உடம்பிலே போர்த்திய வண்ணம், வலது கையை மேலோங்கி உரத்த குரலில் செழுமையான வார்த்தைகளை, பரபரப்பின்றித் தடையின்றி அள்ளிச் சொரியும் அவர், அவனது இறகுகளை வெட்டிவிட்டுக் கொண்டே வந்தார்.

தனது தகுதிக்கு மீறிய நிலையிலேயே அவன் வளர்ச்சியடையத் தொடங்கினான்.

கடும் பகைவர்களையும், அரைகுறை அறிவோடு தன்னைப்பற்றி விமர்சனம் செய்வோரையும், அணுவளவும் பொருட்படுத்தாத பரிபக்குவ நிலையை அவன் அடைந்தான்.

சிறிய வயதிலேயே பெரிய சிந்தனைகளில் இறங்கினான்.

அது அவனுக்குச் சுவையாகவும் இருந்தது. அவன் பார்க்கும் உலகம் விரிந்துகொண்டே வந்தது.

கொந்தளிக்கும் அவனது உணர்ச்சிகள் துள்ளித் துடித்தன.

மனந் திறந்து பேசத் தொடங்கினான்.

ஆலயத்தின் கொடி, ஆடம்பரப்பிரியர்களின் விளம்பரத்திற்குப் பயன்பட வேண்டாமென்று கேட்டுக்கொண்டான்.

"நாம் மரப்பாச்சித் திருமணம் செய்யவில்லை.

நாம் நம்பிக்கைத் தெய்வத்தின் பிள்ளைகள்.

எந்த நம்பிக்கை நம்மை ஒன்று சேர்த்து வைத்ததோ, அந்த நம்பிக்கைத் தெய்வத்தின் பெயரால், என் சகோதரர்களே, நாம் இறுதியும் உறுதியுமான முடிவுக்கு வருவோம்.

நம் இரண்டு கால்களையும், இரண்டு கோயில்களில் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஒரு கோயில் தியாக உள்ளத்தை வளர்ப்பது; ஒரு கோயில் ஆசைகளை வளர்ப்பது.

தியாகமும் ஆசையும் உறவினர்களல்ல.

ஆசைக் கோயிலில் விளம்பரப் பிரியர்களின் மடியிலே நாம் தவழக் கூடாது.

வாருங்கள் ஒரு முடிவுக்கு வருவோம்," என்று துடித்த குரலில் கூறினான்.

அவன், பைத்தியக்காரன்!

உலகத்தில் எந்த அங்கமும், உண்மைகளை உண்மையளவில் ஏற்றுக் கொள்வதில்லை,

அவன் கேலிக்கும் ஆளானான்

எதிரிகளின் கேலியை, ஏறிட்டுப் பார்த்துவிட்டு நடக்கிறவன் நண்பர்களின் கேலியைத்தாங்க முடியாதவனானான்.

இப்போதும் அவன் பைத்தியக் காரன்!

பௌத்த தேவாலயத்தைவிட, இந்து அறநிலையங்களைவிட, முகமதியப் பள்ளி வாசல்களைவிட கிறித்தவக் கோயில்களைவிட, புனிதமான தன் ஆலயத்திலிருந்து புறப்பட்டான்.

உயர்ந்து நிற்கும் ஆலயத்தின் கதவுகளை நோக்கி வந்தான்.

"எங்கே போகிறாய்?" ஒருகுரல் கேட்டது.

"எதற்காகப் போகிறாய்?", மறு குரல்.

"எப்படிப் போய்விடுவாய்?" மூன்றாவது குரல்.

"எங்களை விட்டா போகிறாய்?" நான்காவது குரல்.

"பார்க்க வேண்டியதை இங்கிருந்து பார்; சொல்ல வேண்டியதை இங்கிருந்து சொல்; பாட வேண்டியதை இங்கிருந்து பாடு" பல குரல்கள் மோதி எழுந்தன.

"அடபாவி, எங்கள் எண்ணங்கள் முழுக்க முழுக்க உன்னிடம் பதியும் வரை இருந்துவிட்டு, ஓடிவிடப் பார்க்கிறாயே இது நியாயமா?" ஒருவன் தழுதழுத்த குரலில் கேட்டான்.

அவன் நெஞ்சு விம்மிற்று, தொண்டை கம்மிற்று, கண்களில் ஊற்றுப் பெருகிற்று.

சலனத்திற்கும் இரக்கத்திற்கும் அடிக்கடி ஆட்பட்டுவிடும் அவன், குழந்தைபோல் அழுதான்.

அன்பு கொடுமையானது, பாசம் பயங்கரமானது,

நூறுவகைக் குழப்பங்களில் அவனது இளகிய மனது தடுமாறியது.

"என்னை விட்டுவிடுங்கள் - என்னை விட்டுவிடுங்கள்", மறுபடியும் கெஞ்சினான், கெஞ்சுகிறான்,

என் அருமை நண்பர்களே!

அவனைவிட முயலுங்கள்.

அவன் தன்னை வளர்த்துக்கொண்டதன்றி உங்களுக்கு என்ன செய்துவிட்டான்?

அவன் எதைக் கேட்டு நீங்கள் இல்லையென்றீர்கள்?

[8-ம் பக்கம் பார்க்க]

போய் வருகிறேன்!

தென்றலில் தொடர்ந்து வரும் இக்கட்டுரை பற்றி, தினசரிப் பத்திரிகையினரும் பிற பத்திரிகையினரும், எனது முடிவான அபிப்பிராயத்தைக் கேட்டவண்ணமிருப்பதுடன், சில பத்திரிகைகள் நான் கட்சியிலிருந்து விலகி விட்டதாகவும் செய்திகளை வெளியிட்டுள்ளன. முடியாத கட்டுரைக்கு, முடிவான கருத்தை எண்ணிக்கொள்வது—எண்ணிக்கொள்கிறவர்களின் எண்ணத்தைப் பொறுத்தே தவிர — என்னைப் பொறுத்ததல்ல — நான் எங்கே போய் விடப்போகிறேன். என்னைப் பற்றி நானே தெரிந்துகொள்வதற்கு, உங்கள் முடிவுகளை கடிதம்மூலம் எனக்குச் சொல்லுங்கள்.

தினமும் அலுவலகத்தில் வந்து குவியும் கட்டுக் கட்டான கடிதங்களை, நானும் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். அடுத்த இதழை கவனியுங்கள்.

அன்பன்,
கண்ணதாசன்

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

நகைக் கடையில் குவியும் பெண்கள் கூட்டத்தைப்போல், அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அதிசயத்தீர்கள்.

நீங்கள் நினைப்பதற்கு மாருக அவன் ஒன்றைச் சொல்லிவிட்டாலும், அவன் சொன்னதற்கு மாருக நீங்கள் ஒன்றைச் சொன்னதில்லை

அடித்தளத்தில் மலர்ந்துள்ள எந்த மலரிடத்தும் அவனுக்கு வெறுப்பில்லை.

உணர்ச்சி அலைகளில் ஏறி, உச்சிக் குன்றில் உட்கார்ந்துவிட்ட அவன், தளரும் அலைகளோடு தவழ்ந்து கரையேற முயல்கிருன்.

நீங்கள் உங்கள் தோணிகளால் வழி மறிக்கிறீர்கள்

அவன் மயங்குகிருன்.

இறந்துபோன தாயை இடுகாட்டில் புதைத்து விட்டுத் திரும்பிவரும் வழியில் நின்று திருப்பிப் பார்க்கும் மகனைப் போல், தன் முடிவுகளை அவன் திரும்பிப் பார்க்கிருன்.

விடிந்துவிட்ட வானத்தில் மறைந்து விட்ட நட்சத்திரங்கள், இருண்டுவிட்ட வானத்தில் மறுபடியும் தோன்றுவது போல் அவனை மீண்டும் தோன்றச் சொல்கிறீர்கள்.

கெட்டிபட்ட நெய், மறுபடியும் சூடு பட்டு உருகுவதுபோல், உங்கள் ஆசை இதயத்தின் சூடு அவனை உருக வைக்கிறது.

ஓடுகின்ற யானையை, வளையங்களால் ஆன சங்கிலிகளால் கட்டி இழுப்பது போல், கண்ணீர்த் துளிகளாலான சங்கிலியைக் கட்டி அவனை இழுக்கிறீர்கள்.

இவற்றிற்கும் அவன் தப்பிவிட்டால், என் இனிய நண்பர்களே!

அவன் வாழ்வில் வியக்கத்தக்க சம்பவங்கள் நடக்கும்.

சிறையிலிருந்து தப்பி யோடிய கைதி, நள்ளிரவில் தன் வீட்டுக்கு வந்து தன் குழந்தைகளைப் பார்த்து முத்தம் கொடுத்துவிட்டு விடை பெறுவதுபோல்,

அவன் அடிக்கடி உங்களைத் தேடி வருவான்.

இரவில் ஊர்ந்து சென்றுவிட்ட தானிய வண்டியிலிருந்து சாலைகளில் சிதறி விழுந்த தானியங்களை, காலையில் மாடப் புருக்களும் மணிப் புருக்களும் கூடிக் குவிந்து கொத்தித் தின்பது போல், சென்றுவிட்ட அவன் சிதறி விட்ட கவிதைத் தானியங்களை நீங்களும் சுவைத்துக் கொண்டிருப்பீர்கள்.

மலையின் உச்சியிலிருந்து இறங்குவதாகப் பாவித்துக்கொண்டு, உருண்டு விழுந்து அடித்தளத்திற்கு வந்துவிட்ட அவனை, அங்கே நிற்கின்றவர்கள், அநுதாபத்தோடு பார்ப்பார்கள்.

அதன் பிறகு அவன் குரலேஅடை பட்டுப்போகலாம்,

எந்தச் சக்தி அவனைப்பாட வைத்துக் கொண்டிருந்ததோ? அந்தச் சக்தியிலிருந்து வெளியேறிய பிறகு, அவன் ஊமையாகவும் ஆகிவிடலாம்.

வாழும்போது நாலுபேருக்கு நடுவிலே வாழ்ந்த அவன், சாகிற போது யாருமே அறியாமலேயே செத்தும் போகலாம்.

நெடுநாள் தூங்குகிறவனையே செத்துவிட்டவனாக நினைத்து கொத்தித் தின்னும் கழுகுகள், உண்மையிலேயே செத்துவிட்டவனை உடனே கொத்தித் தின்று விடலாம்.

அவன் மனைவி மக்கள் கூடிநின்று அழுது ஓய்ந்து விடலாம்.

இதோ பாருங்கள்!

அவன் சாவுவரை பார்த்து விட்டுத் தான் வாழ்வுக்குத் திரும்பி வந்திருக்கிருன்.

இன்பங்கள் அனைத்தையும் அவன் அறிவான்.

துன்பங்களில், உலகத்தின் பரம்பரைத் துன்பங்களோடு புதிய துன்பங்களையும் அவன் அநுபவித்திருக்கிருன்.

வானத்தில் வட்டமிடும் போதே, பூமியில் கிடக்கும் இறைச்சித் துண்டைக் கவனிக்கும் கழுகினைப் போன்ற மனிதர்கள், அவன் அருகிலேயே இருந்திருக்கிருர்கள்.

மற்றவர்களின் கால்களில் தன் உடம்பைத்தூக்கி நிறுத்திவிட்டு, தானே நடப்பதுபோல் பாவித்துக்கொள்வோர் அவன் நண்பர்களாக இருந்திருக்கிருர்கள்.

என் இனிய நண்பர்களே!

அவனை அதிகம் பேச வைக்காதீர்கள்!

அவன் துறவியாவதை உங்களால் அநுமதிக்க முடியாதென்ருல், அவனை ஒரு மௌன தேவதையாக வைத்துக் கொள்ளுங்கள்.

அவன் ஆயுள் மிகவும் குறுகியது.

அந்தவகையில் அவன் சொல்வது தப்பாது.

அவன் கதை முடியும்போது நீங்கள் அனைவரும் உயிரோடு இருப்பீர்கள்.

உங்கள் தோள்களிலேயே அவன் சவம் ஊர்வலம் போகட்டும்.

அதுவரை, அவன்தான் விரும்பும் வழியில் பாடட்டும்.

என் இனிய நண்பர்களே.

இதயக் கதவுகள் மூடட்டும்.

அடுத்த இதழில்

முடிவின் தொடக்கம்

அறிவிப்பு.

எனக்குக் கடிதம் எழுதும் நண்பர்கள், இனித் "தென்றல்" முகவரிக்கே எழுதவும். பொது முறையில் எனக்கு எழுதும் கடிதங்களை கண்ணதாசன், "தென்றல்", சென்னை-6. என்றும், பத்திரிகை சம்பந்தமாக எழுதும் கடிதங்களை ஆசிரியர் தென்றல், சென்னை-6. என்றும் எழுத வேண்டுவதுடன், தனிப்பட்ட கடிதங்களை கீழ்க் காணும் எனது இல்ல முகவரிக்கு எழுத கோருகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்
விசாலாட்சி இல்லம்
16 என்சுமென் ரோடு
சென்னை-17.

★ ★ ★

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். தென்னகத்தில் உள்ள தலை சிறந்த பாங்குகளில் முன்னணியில் நிற்பதும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒன்பதாவது பெரிய பாங்கு என்று கருதப்படுவதுமான "இந்தியன் பாங்கி"-ன் நிதி நிலைமை பற்றி யாரோ கிளப்பிவிட்ட வீண் புரளியை நம்பி பொதுமக்கள் போட்டிருந்த பணத்தை பாங்கியிலிருந்து திரும்பப் பெறத் துவங்கினர். இந்த வீண் வதந்தி தென்னகம் முழுவதும் பரவி, மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. இந்தச் செய்தி அறிந்த நமது மாநில நிதியமைச்சர் அரசாங்க பாங்கு கவர்னரை கலந்து கொண்டு வெளியிட்ட அறிக்கை எல்லாருடைய உள்ளத்திலும் ஆறுதலை அளித்திருக்கிறது. திரு. ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் மத்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் கேட்ட விளக்கத்திற்கும், மந்திரி தந்த ஆறுதல் எல்லோருடைய கவலையையும் நீக்கியிருக்கிறது. தக்க சமயத்தில் அரசாங்கம் முன் வந்து பிரச்சினையை தெளிவு படுத்தியது வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் மிக்க நன்மையாக இருக்கிறது. இதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கத்தாரையும், திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

அன்பன்,

நாதன் அன் கம்பெனி,
திருச்சி-8.
பா. பாண்டுரங்கன்.

★ ★ ★

மதுரை எழுத்தாளர் மன்றம்.

20-11-60 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் இலக்கியத் திறனாய்வுக் கூட்டம் பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் அவர்கள் தலைமையில் மதுரைக்கு அருகிலுள்ள திருமோகூரில் நடைபெற்றது. தாய், மனைவி, பெண், என்னும் தலைப்புகளில் எழுதப்பட்ட சிறுகதை கட்டுரை, கவிதைகளை, மனோகரன், இரத்தினவேல், கூடலரசன், மதிவாணன், சண்முகம், வேங்கடாசலம், ரவி, சண்முகக்கனி, பொன்னம்பலம், பேகன் ஆகியோர் படித்து அரங்கேற்றினர். பேராசிரியர்கள் ஔவை. துரைசாமி, மே. சுந்தரம், இருவரும் கருத்துரைகள் கூறினர்.

பிற்பகலில் நடைபெற்ற மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மூன்றும் ஆண்டு விழாவினை சனவரித் திங்கள் எட்டாம் நாள் (8 1-61ல்) நடத்தவும், அதில் கலந்துகொள்ள பெரியார் இராமசாமி, ராசகோபாலாச்சாரி, ஈ. வே. கி. சம்பத், நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் ஆகியோரை அமைக்கவும், கவி அரங்கத்தின் தலைவராகக் கவிஞர் கண்ணதாசன், மற்றும் பெரி. சிவனடியான், தமிழண்ணல் பேகன் ஆகியோரை அழைப்பதெனவும், திராவிட மொழி ஆராய்ச்சியின் முதுபெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணரை அழைத்துப் பாராட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் இலக்கியப் போட்டிகள் உள்ளன.

1. பாட்டு—32 வரிக்குள் –பொருள் : புது வெள்ளம்
2 சிறுகதை—ஐந்து பக்கத்திற்குள்—திருப்புமுனை
8 கட்டுரை—சமுதாய வளர்ச்சி
4. சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ள கையெழுத்துஏடு!

தமிழார்வமும் தகுதியும் நிறைந்தவர்களும், கல்லூரி மாணவ மாணவிகளும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டுகிறோம். பாட்டு, சிறுகதை, கட்டுரை கையெழுத்து ஏடு ஆகியவைகளை டிசம்பர் 15-ம் நாளுக்குள், 3. கபாணடிங் ஆபீசர் தெரு 2 என்ற செயலாளர் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். போட்டியின் முடிவுகள் ஆண்டு விழாவின்போது அறிவிக்கபட்டு பரிசுகள் வழங்கப்படும.

அன்புள்ள
கூடலரசன்,
செயலாளர், மதுரை எழுத்தாளர் மன்றம்

மல்லிகைப்

31. தங்கத்தின் மன உறுதி.

கந்தசாமி வாத்தியார், முருகேச வாத்தியாரிடம் இந்தச் செய்தியைக் கூறியபோது அவர் அடைந்த திகைப்பும் வியப்பும் பிரமிப்பும் சொல்லத் தக்கதன்று. நான் இந்த உலகத்தில் தான் இருக்கிறேனு என்றே அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

தங்கத்திடம் எப்படி இந்த மாறுதல் ஏற்பட்டது என்பதை அந்த இரண்டு வாத்தியார்களாலும் சரியாகவோ முழுதாகவோ புரிந்துகொள்ள முடியவில்லை. அகப் பாட்டுக்களிலே வருகின்ற தலைவிமார்களைப்பற்றி அந்தக் காலத்துப் புலவர்கள் எழுதி வைத்துள்ள இன்பியல் துறைச் சொற்களைப் பற்றியெல்லாம் நுணுகி நுணுகி ஆராய்ந்து பெருங் கண்டுபிடிப்புகள் செய்து தம் புலமைக்கு மெருகிட்டுக் கொண்ட அந்த ஆசிரியர்களால், தங்கத்தின் இந்த மன மாறுதலுக்கு மட்டும் பொருள் புரிந்துகொள்ள முடியவேயில்லை.

தங்கம், சாதாரணப் பெண்ணுக. சம்பளத்தைத் தவிர வேறு வரும்படியில்லாத கந்தசாமி வாத்தியாரின் மகளாகமட்டும் இருந்த காலத்தில் இந்த முடிவுக்கு வந்திருப்பாளேயானல், அவர்கள் சிறிதும் அது குறித்து ஆச்சரியப்பட்டிருக்கவே மாட்டார்கள். பெரும் பணக்காரியாகவும், ஒரு ஜமீன் மாளிகைக்கே அதிபதியாகவும் உள்ள நிலையில், சாதாரணமான ஒரு பள்ளி ஆசிரியரின் வளர்ப்புப் பிள்ளையின் மேல். அதுவும்கான்வெறுத்தொதுக்கிய ஒருவனின் மேல் அவள் அன்புகாட்டத் தொடங்கியதுதான் அவர்களால் நினைத்துப் பார்க்கமுடியாத ஆச்சரியமாக இருந்தது. அந்த நாளிலாக இருந்தால். நமக்குத் திருமணமாக வழியேயில்லை. குடும்பத்தின் துயரத்தைத் தீர்க்க இந்த நடராசனையாவது மணம் புரிந்துகொள்ளுவோம் என்று அவள் தன் மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டதாக எண்ணிக்கொள்ளலாம். இப்போது அப்படி எண்ணக்கூடிய வாய்ப்பேயில்லை.

கந்தசாமி வாத்தியாரைப் பார்த்து முருகேச வாத்தியார் நாத்தழுதழுக்கக் கூறினர்! "கந்தசாமி இந்த உலகத்தை என்னுல் நம்பவேமுடியவில்லை. என் மகன் நடராசனைத்தான் எடுத்துக் கொள்ளேன், அவன் வாழப் பிறந்தவன் என்று நான் நினைக்கவேயில்லை. அவன் வாழ்க்கையிலே ஏற்படுகின்ற திருப்பங்கள் ஒவ்வொன்றும் எனக்கு ஆச்சரியத்தையே உண்டாக்குகின்றன. சின்னஞ் சிறு வயதில் அவனைக் கிணற்றிலே தள்ளிவிட்டு அவன் தாயும் குதித்திருக்கிருள். பின்னுல் குதித்த அவள் இறந்து போக இவன் பிழைத்துக்கொண்டான். கிணற்றுக்குள்ளே யாரோ ஒரு தாயும் குழந்தையும் விழுந்த செய்தியைக் கேட்ட நான் ஓடோடிச் சென்று இருவரையும் கரைக்குத் தூக்கி வந்தேன். அதிலே இவன் பிழைத்துக்கொண்டான். பாவம்! கையில் ஊனமுள்ள பிள்ளையாக இவன் இருந்தான். நான்தான் பரிதாபப்பட்டு என் பிள்ளையாக வளர்த்தேன். வளர்ந்து வந்த இவனே பைத்தியக்காரனுக இருந்தான். பைத்தியக்காரனுக இருந்தாலும் வளர்த்த பாசத்தால் நான் இவனை எப்படியாவது வாழவைத்துவிட வேண்டும் என்றுதான் முதலில் தங்கத்துக்கும் இவனுக்கும் மணம் புரிந்து வைக்க முயன்றேன். எதிர்பாராத விதமாக அண்ணுமலைப் பண்டிதர் வந்து பைத்தியத்தைத் தெளிவித்ததோடு மட்டுமல்லாமல்நல்ல அறிஞனுகவும் ஆக்கிவிட்டார். பிறகு இவன் தங்கத்திடம் தன்மனத்தைப் பறிகொடுத்திருக்கிருன். ஆனல் அவளோ விரட்டியடித்து விட்டாள். அதன் பிறகு எங்கோ காணமல் போய் விட்டான். இப்போது தங்கம் அவனைத் திருமணம் செய்து கொள்ள முடிவு கட்டியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவ்வாறு நடந்தால் அது மகிழ்ச்சிக்குரியதே! ஆனல். இப்போது எங்கிருக்கிருனே தெரியவில்லையே!" என்ருர்.

"என்மைத்துனர் கயிலாயத்தின் மூத்த மனைவி தம் பிள்ளையோடு கிணற்றில் விழுந்து விட்டாள். அதனுல்தான், அவருக்குத் தாய்தந்தையில்லாத பிள்ளைகளிடத்தில் இரக்கமும் அனபும் உண்டாகிறது நடராசனையும் அவர் இப்படிப்பட்ட மன இரக்கத்தால்தான் கவனித்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயன்றிருக்க வேண்டும். ஆனல், அவரிடம் கூடச் சொல்லாமல் நடராசன் திடீரென்று மறைந்து போனதுதான் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனல், நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் தங்கத்தை விரும்பி அவள் மறுத்துவிட்டதால் ஓடிவிட்டான் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆனல் இன்று தங்கம்அவனை மணந்து கொள்ள விரும்பும் செய்தி அவனுக்குத் தெரியுமோ என்னவோ?" என்ருர் கந்தசமி வாத்தியார்.

இவ்வாறு இரண்டு வாத்தியார்களும் பேசிக் கொண்டிருந்து நடராசனைத் தேடிப்பிடிக்க ஏதாவது வழிகண்டு பிடிக்க வேண்டும் என்றும், வருகிற தைமாதத்தில் தங்கத்திற்கும் நடராசனுக்கும் திருமணம் செய்து வைத்து விடவேண்டும் என்றும் முடிவு கட்டிக் கொண்டார்கள்.

பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் குளத்தங்கரையில் உள்ள வேப்ப மரத்தினடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு, முருகேசரைப் பிரிந்து வீட்டிற்குவந்த கந்தசாமி வாத்தியாருக்கு மற்றுமோர் ஆச்சரியம் காத்திருந்தது

வீட்டில் அவர் நுழையும்போது சற்று முன்தான் அங்குவந்து சேர்ந்த கயிலாயம் ஊஞ்சலில் போய் உட்கார்ந்தார்.

"நல்லவேளை! கந்தசாமி உனக்கு நூறு வயது எங்கே நல்ல விஷயமாக பேசவநத்போது இவன் வீட்டில் இல்லாமல் போய்விடுகிறனே என்று எண்ணினேன்! நீயும் வந்துவிட்டாய்!' என்ருர் கயிலாயம்.

"பெரியவர்கள் எந்தக் காலத்தில் எந்த வேளையில எந்த இடத்தில் எந்தப் பேச்சுப்பேசினுலும் அது நல்ல விஷயமாகவேயிருக்கும்" என்று சொல்லிக் கொண்டே, கந்தசாமி வாத்தியார் அண்ணுமலைப் பண்டிதரின் எதிரில் பாயில் உட்கார்ந்தார்.

மரகத அம்மாளும் அவர் ஓரமாகக் குந்தியிருந்தாள்.

"கந்தசாமி, சும்மா வேதாந்தம் பேசாதே! இப்போது நான் ஒரு கலியாண விஷயமாகப் பேச வந்திருக்கிறேன்" என்ருர் கயிலாயம்.

"உண்மையில் அது நல்ல வேளைதான்! பேசஇருப்பதும் நல்ல விஷயந்தான். சற்றுமுன் தான் பேசிக் கொண்டிருந்ததும் இதே நல்ல வேலைதான்!" என்று கந்தசாமி தன்மனத்திற்குள் எண்ணிக் கொண்டார்.

"கந்தசாமி, என்ன பேசாமல் இருக்கிருய்? நான் உன் மகள் தங்கத்தின் திருமணம் பற்றித் தான் பேச வந்திருக்கிறேன்" என்று கயிலாயம் கூறியபோது அவர் மேலும் வியப்புக் காளாருர். ஆனல். கயிலாயம் தொடர்ந்து சொன்ன அந்தச் சொற்கள் அவர் இதயத்தைப் படீரென்று உடைத்துவிடும் போல் இருந்தன.

"என்மகனுக்கு உன்மகளைக் கட்டிக் கொடுக்கிருயா? என்று கேட்கத்தான் வந்தேன்' என்று கயிலாயம் கேட்டவுடன் மரகத அம்மாளும் அதிர்ச்சியடைந்தாள்.

"அண்ணு, தெரிந்துதான் கேட்கிறீர்களா? இரண்டாந்தாரமாக உங்கள் மகனுக்குத் தங்கத்தைக் கட்டிக் கொடுக்க நாங்கள் எப்படி சம்மதிக்க முடியும். அதுவும் அவனைப் போன்ற தரங்கெட்டவனுக்கு எப்படி எங்கள் பெண்ணைக் கொடுக்க முடியும்?" என்று பொறுக்கமுடியாமல் கேட்டுவிட்டாள் மரகத அம்மாள்.

"மரகதம், நீ யாரை நினைத்துக் கொண்டு பேசுகிருய்?" என்று கேட்டார் கயிலாயம்.

"அண்ணு, அந்த சுந்தரேசன் குணம் உங்களுக்குத் தெரியாதா? பெற்ருேர் என்ற மரியாதை கூட இல்லாமல் உங்களையே பகைவர் போலக் கருதிய அவனுக்காக நீங்கள் பரிந்து பேசவந்துவிட்டீர்களே! அவன் தங்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடியதைக் கூடவா அதற்குள் மறந்துவிட்டீர்கள்!" என்று மனந்தாங்காமல் பேசினுள் மரகத அம்மாள்.

"மரகதம், கொஞ்சம் பொறு. நான் முழுவதும் பேசுவதற்குள் நீ இப்படி அவசரப் பட்டுப் பேசுவது நன்ருக இருக்கிறதா?" என்று சிறிது கடுமையான குரலில் சினக்குறியுடன் கேட்டார் கயிலாயம்.

மரகதம் அப்பொழுதும் விடவில்லை. "நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவன் இனிமேல் திருந்திவிடப் போவதாக உறுதி சொல்லிவிட்டான் என்று சமாதானம்சொல்லுவீர்கள். நீங்கள்வேண்டுமானுல் அவனைநம்பலாம். பெற்றமகன் என்ற பாசம் உங்களை இரக்கமும் பரிவும் காட்டச் சொல்லலாம். ஆனல், நாங்கள் அவனை நன்ருகப் புரிந்து கொண்டுவிட்டோம். நாய் வாலை நிமிர்த்த முடிந்தால். உங்கள் மகனைத் திருத்த முடியலாம். எங்கள் தங்கத்தை இவ்வளவு நாட் கழித்துக் கடைசியாகப் படுகுழியில் தள்ள எங்களுக்கு எப்படி மனம்வரும்?" என்று பொரிந்து தள்ளினுர் மரகதம்.

கயிலாயம். தங்களுக்கு நன்மை செய்வதாகத் தொடங்கிக் கடைசியில் இப்படித் தங்கத்தின் வாழ்வைப் பாழாக்க வந்துவிட்டாரே என்றுகூட அவள் உள்ளம் குமுறியது.

'மரகதம், கொஞ்சம் வாயை மூடு, உன் அண்ணனை இவ்வளவு மோசமாக நீ நினைப்பதே தவறு. சுந்தரேசனை நான் என் மகனுக நினைத்து இருபது வருடங்களுக்கு மேலாகிறது. இப்போது நான் பேசுவது என் அருமை மகனைப்பற்றி. இறந்து போன என் மனைவி தேவநாயகியின் பிள்ளைக்குத்தான் உன் மகள் தங்கத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன்" என்று கயிலாயம் சொன்னபோது மரகத அம்மாளால் நம்பவே முடியவில்லை. ஒன்றன்மேல் ஒன்று இன்று பேரதிசயமான செய்திகள் நிகழ்கின்றன என்று கந்தசாமி வாத்தியார் நினைத்துக்கொண்டார்,

'ஐயா, உங்கள் மகனேடு மனைவியும் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாக வல்லவா கேள்விப்பட்டிருந்தோம்!" என்று கந்தசாமி வாத்தியார் கேட்டார்.

"கந்தசாமி, அப்படித்தான் நானும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனல், இப்போது அவன் உயிருடன் இருப்பதாகத் தெரிந்துகொண்டுவிட்டேன். ஆம்! என் குலத்தை விளக்க வந்தவனுக. என் குடிப் பெருமையைக் காக்க வந்த பண்புடையவனுக அந்த மகன் இருக்கிருன். சுந்தரேசன் தங்கத்தைத் தூக்கிக்கொண்டு காட்டுப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்றபோது, தங்கத்தைக் காப்பாற்றியவன் அவன்தான். அவன் இப்பொழுது சென்னையில் இருக்கிருன். என் நண்பர் ஒருவர் அவனைத் தன் வீட்டில் வைத்திருக்கிருர். அவனும் தங்கமும் பலமுறை சந்தித்திருக்கிருர்கள். தங்கத்திற்கும் அவனுக்குமிடையே ஒரு பாசம்கூட வளர்ந்து வருவதாகத் தெரிந்துகொண்டேன். மனமொத்த அந்த இரண்டு பேரையும் ஒன்றுபடுத்தி மணக்கோலத்தில் காணவேண்டும் என்பதற்காகவே உங்களைக் கலந்து கொண்டு ஏற்பாடு செய்ய வந்தேன்" என்று கயிலாயம் கூறியபொழுது அவர்கள் இருவருக்கும் வாயடைத்துப் போய் விட்டது.

ஆமாம். தங்கம் அடிக்கடி அந்தப் பையனை மருத்துவ விடுதியில் போய்ப் பார்த்துவந்தாள். மோட்டார் சைக்கிளில் அடிபட்டுக் காயமடைந்து மருத்துவ விடுதியில் கிடந்ததனுல். அண்ணு, ராஜு தான் உங்கள் மகனு? என்னுல் நம்ப முடியவில்லையே! என்று மரகதஅம்மாள் சொன்னுர்.

"ஆமம்மா! அவனேதான்! என்று சொன்ன கயிலாயம் மேற்கோண்டு அவர்கள் என்ன சொல்லப் போகிருர்

தொல்லைக் கனியமுது!

தமிழ்ப்பித்தன்

மணமுடித்த ஆண்டுமுதல் வருடம் ஒன்றாய்
மழலைகளைப் பெற்றெடுத்தாள் என்றன் இல்லாள்
கணமேனும் மனையாட்டி ஓய்வே இல்லாக்
கடுமுழைப்புக் குன்றானள்! ஐயோ பாவம்!
பிணியேனும் வாய்திறந்து பேசாள்; அன்னாள்
பெருந்துயரை அகத்திருத்திக் கொண்டாள்; நெஞ்சின்
குணமேதும் குறைந்தாளா, என்றால், இல்லை
குளிர்நிலவாய்த் தண்காற்றாய் விளங்குகின்றாள்!

சீர்செறிந்த திருவாட்டி என்றன் வீட்டில்
செயலாற்ற வந்தவொரு நாளிருந்தே
நீர்சொரிந்த வாழ்வினையே நாளும் தந்தேன்
நேரிழையாள் அதைமறந்தே சேர்த்தாள் இன்பம்!
கார்செறிந்த முகிலாலே நாட்டில் நன்மை
காண்பதுண்டு; பூண்பதுண்டு; துன்பம் நன்கு
வேர்செறிந்த பின்னாலே நன்மை உண்டோ!
வேதனையே மோதிவரும்: வினையும் சேரும்!

ஏர்செறிந்த பொருளாலே உலகில் இன்பம்
இழைவதுண்டு: நுழைவதுண்டு! ஆனால் அந்தோ
நேர்செறிந்த வாழ்வுடையோர் வாட்டம் காணல்
நேர்கிறது பொற்புவியில்; அதுதான் கேடு!
கூர்செறிந்த வாள்போலும் வறுமைப் பாவி
கொன்றொழிக்க முனைகின்றான்; நானென் செய்வேன்!
பேர்செறிந்த வாழ்வதுவும் பட்டுப் போகும்
பேதையவள் இன்பத்தில் கேடும் சூழும்!

முதலாண்டு பதுமையென வாழ்ந்தாள்; அன்னாள்
முகமெல்லாம் ஒளிப்பெருக்கைக் கண்டேன்; அன்பை
இதழாண்டு கொண்டதனால் இன்பம் என்னும்
இதவாழ்வில் திளைத்திட்டோம்; மயக்கம் கொண்டோம்!
நுதலாண்டு வியர்த்துவிடும்! அதுதான் கூடல்
நுட்பமென நினைத்தேன்நான்; தவறே செய்தேன்!
சிதலாண்டு கொண்டதுபோல் சிந்நாள் தன்னில்
சேயிழையாள் தனைத்துயரம் வவ்விக் கொள்ளும்!

கருவுற்றாள் மனையாட்டி; அத்தச் சேதி
களிப்புக்கே எனைஇழுக்கும்; சொக்கிப் போவேன்!
தெருவுற்ற நண்பர்களும் என்னைக் கண்டு
தினந்தோறும் பாராட்டைக் குவித்தார் அன்பாய்!
குருவுற்ற உடலுடையார் சொறிந்தே வாடிக்
குலைவுற்ற நிலையதனை எய்தல் போலும்
மருவற்ற என்மனையாள் உடலம் நொந்து
மயக்கமுற வீழ்வாள்; பின் எழுவாள், பாவம்!

மகப்பேறு மனிதர்க்கே வேண்டும் என்னும்
மகத்தான தத்துவம்தான் நாட்டில் உண்டு!
இகப்பேறு தனைமறந்தே பரத்திற் கஃதும்
இனிதாகும் எனச்சொல்வார் மூடர் சில்லோர்!
அகப்பேறு பெறுதற்கே என்றன் நெஞ்சம்
அன்புடனே மழலைதனை விரும்பும் போதில்
சுகப்பேறு தனையெண்ணி என்றன் இல்லாள்
துயர்ப்பட்டாள்; பயப்பட்டாள்; சித்தம் நொந்தாள்!

சிலமாதம் பறந்துவிட ஒருநாள் வீட்டுத்
திண்ணையிலே படுத்திருந்தேன்; உள்ளிருந்தே
பலமாகக் கதவிடிக்கும் ஓசை கேட்டேன்
பதைபதைத்தேன்; எழுந்திருந்தேன்; அருகிற் சென்றேன்!
குளமாக என்னன்னை நின்றாள்; நெஞ்சில்
கொதிப்பேறிப் போனவள்போல் தட்டுப் பட்டாள்
''வளமாக இல்லையடா, உன்றன் இல்லாள்;
வைத்தியம்செய் மாதுவர வேண்டும்'' என்றாள்.

காலோடக் கையோட உடலும் ஓடக்
கடிதினில்நான் பறந்தோடிப் படிப்பில் தேர்ந்து
மேலாகும் வைத்தியம்செய் அம்மாள் தன்னை
விரைவாக அழைத்துவந்தேன்; அதற்குள் ளாகப்
பாலாகும் சேதிஎதிர் வந்தே நிற்கும்
''பயலொருவன் பிறந்துவிட்டான்; பயமே வேண்டாம்!
ஆலாகும் படிவாழ்வான்'' என்றாள் அன்னை!
அதுகேட்டேன், மகிழ்வுற்றேன்; குதித்தேன் துள்ளி!

வைத்தியம்செய் மாதுதனை அனுப்பிப் பின்னர்
வாசலதன் அருகமர்ந்தேன்; பாசம் என்னும்
பைத்தியத்தில் என்னுள்ளம் ஆழ்ந்தே போகும்;
பயமெல்லாம் பறந்தழியும்; உவகை துள்ளும்!
கைத்திறத்துச் சிற்பிகள்செய் சிலையில் தோன்றும்
கனிவமுதைப் பரிசாக்கும் மழலை தன்னை
கைத்தலத்திற் கொண்டுவந்தாள் என்றன் அன்னை
களிப்பென்றன் இதயத்தில் உலவும்; நிற்கும்!

''பாட்டனார் தன்போலே இருக்கின்றான்பார்!
பயமறியான் உன்செல்வன்; சுட்டிப் பையன்!
தேட்டமெலாம் கொடுத்திடுவான் இனிமேலுன்றன்
சிந்தையிலே மகிழ்வுறையும் திருவும் சேரும்!
வாட்டமெலாம் போக்கிடுவான் மழலைப் பேச்சால்
வல்லமைதான் தந்திடுவான்'' என்றே அன்னை
நாட்டமுடன் என்னிடத்தே சொல்லும் போதில்
நன்மனைவி தனைநினைப்பேன்; மகிழ்வே கொள்வேன்!

முதற்குழந்தை பிறந்தேழு மாதம் போகும்
மொய்குழலாள் மறுபடியும் கருவே யுற்றாள்!
விதிர்விதிக்கும் அவள்மேனி அதனால் நாளும்
விசனம்நனி உற்றிடுவாள் பாவம்; பாவம்!
கதிர்விரிக்கும் அவள்வதனம் மங்கிப் போகும்!
கண்ணெல்லாம் சோர்வுபடர் அரங்கம் ஆகும்!
புதிர்விரிக்கும் அன்னாளின் இதயப் பூங்கா
பொலிவிழக்கும்; துயர்பெருக்கும்; வாடிச் சாகும்!

தவறுசெய்தோன் நானென்னும் உணர்வே தோன்றத்
தலைகுனிந்தே நடக்கலுற்றேன்; வெட்கம் கொண்டேன்
கவறுசெய்தோன் நிலைபோலும் களிப்பே இன்றிக்
காசினியில் உலவிவந்தேன்; மழலைப் பேற்றால்,
கவர்ச்சிமிகும் என்மனையாள் மீண்டும் நோகும்
காட்சியெனைச் சுட்டெரிக்கும்; வெந்தே போவேன்!
நிவறுசெயும் வழிதேடி நிற்பேன்: ஆனால்
நெஞ்சிலுறை சோர்வேதான் என்னைத் தாக்கும்!

வருடங்கள் நான்கங்கே பறந்தே போகும்
வனிதையவள் ஒருமூன்று மழலை கட்கே
உருவங்கள் கொடுத்திட்டாள்; எழிலாம் மேனி
உருக்குலைந்தே நின்றிட்டாள்; கண்ணீர் விட்டாள்!
பருவங்கள் மாறிரெல் உலகில் உண்டு
பழஞ்சருகு தானுதிரும் நிலையும் உண்டு!
புருவங்கள் வழிஎழிலைச் சேர்ப்பாள் வாழ்வில்
புயலென்றும் மாறாமல் நிலைத்தே நிற்கும்!

பிறப்பீயும் ஒருத்திக்குப் பெரிதாய்த் துன்பம்
பிறப்பதெனில் பரிதாபம் அன்னாள் வாழ்வு!
சிறப்பீயும் மக்கள்குலம் என்பார்; ஆனால்
சேர்வதெலாம் கழியிடர்தான் அன்னாளுக்கே!
'இறப்பீயும் வாழ்வெனக்கு வந்துற்றாலும்
ஏற்றிடுவேன் நான்தயங்கேன்'' என்றாள்; ஐயோ!
மறப்பீயும் மனம்எனக்கே இருந்தால் அன்னாள்
படுந்துயரை மறந்திடுவேன்; தேற்றிக் கொள்வேன்!

ஐந்தாவ தாண்டினிலே வீட்டில் கண்ட
அதிசயம்தான் ஒன்றுண்டு அதையும் சொல்வேன்!
மைந்தேதும் அவ்வாண்டில் இல்லை என்னும்
மகத்தான 'தோர்சேதி அதுவே யாகும்!
நைந்தாடும் நிலையொழிந்த தென்றே எண்ணி
நலமாக வாழ்கின்ற போதில் இல்லாள்
நொந்தாடும் நிலைபெற்றாள்; கருவே யுற்றாள்
நுவலவொணாத் துயரதனை மீண்டும் கண்டாள்!

ஆறாவ தாண்டினிலே ஒருநாள் இல்லாள்
அதிதுயரம் கொண்டிட்டாள் மனமே நொந்தேன்
தேறாத செயலுடையேன் என்னை நானே
திட்டியவா றிருந்தேன்என், வீட்டின் உள்ளே,
மாறாத மனமுடையாள் என்றன் இல்லாள்
மயக்கமுற வீழ்ந்திட்டாள்; சிந்நேரத்தில்
தீராத துயர்க்கடலில் வீழ்ந்தேன்; அந்தோ
திருவாட்டி பெற்றெடுத்தாள் இரட்டைப் பிள்ளை!

வரலாற்றில் முரண்

ருக்மணி இராமநாதன், பி.எஸ்ஸி

கல் தோன்றிய காலத்தே தோன்றிய மொழி தமிழ். இலக்கிய இலக்கணச் செறிவுடைய மொழி தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இன்று இல்லை. அதனால் பெற்ற பெருமையைப் பேணி வைத்திருக்கும் அழியா இலக்கியங்கள் வரலாறாய் வடித்துக் காட்டுகின்றன அவற்றை படிக்காமலோ, படித்தவற்றை முழுதும் உணராமலோ சிலர் வரலாறு எழுதுகின்றனர் இம்முறை மொழி வளர்ச்சிக்கும், நாட்டிற்கும் நலம் தருவதாகாது.

தொல்காப்பியத்தை இலக்கண நூல் என்று கருதி வரலாற்று விற்பன்னர்கள் வறிதே விட்டுவிட்டனர் போலும்! அதிற் காணப்பெறும் கணக்கரிய செய்திகள் முற்கால தமிழ் மக்களின் முன்னேற்றத்தை முரசறைகின்றன. சில ஆராய்ச்சியாளர்கள் உரைகளை மட்டும் மேலெழுந்தவாறு படித்துவிட்டு, பொருள் புரியாமற் செய்தி கூறுகின்ற நிலை விந்தையாக உள்ளது

சங்க காலத்திலும் அதற்கு முன்னும் திராவிடத்தில் போர்கள் நடைபெற்றுள்ளன அவைபற்றிய செய்திகளைப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் பிறவும் பேசுகின்றன. அவ்வாறு நடைபெற்ற போர்களைப்பற்றி அறியுமுன்-"போர்" நடைபெறும் முறைகளை அறிதல் நன்று. வரலாற்றுக்குப் பொருந்தாத முறையில் காணப்பெறும் ஒரு செய்தியையும் அறிய இது வழியமைக்கின்றது.

ஏழு வகைப்பட்ட போர் முறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது. "போர் முறை" என்பது வேறு, "போர்" என்பது வேறு. ஒரு போருக்குக் கையாளப்படும் பல்வேறு நிலைகளே "முறைகள்" என்று குறிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட மன்னன் பகையரசனோடு போரிட விரும்பினால் முதலில் தூது அனுப்புதல் வழக்கம். பின்னர் அவன் பகையரசனுடைய எல்லையூர்களிலுள்ள ஆனிரைகளைக் (பசுக்களை) கவர்ந்து வர, படை வீரர்களை அனுப்புவான். அவ்வாறு செல்லும் வீரர்கள் பசுக்களைக் கவர்ந்து வருவர். பசுக்களைக் கொடுமைப்படுத்தாமல், பாதுகாப்போடுதம் நாட்டிற்குக் கொண்டு வருவர். இதற்கிடையில் பசுக்களைக் கொண்டு போகாதவாறு தடுத்து உரியவன் வென்று போரைத் தவிர்த்தலும் உண்டு.

பசுக்களை ஏன் கவர வேண்டும்? சிந்தனைக்குரிய வினா. பசுக்கள் மக்களுக்குத் துன்பம் செய்யாது தொண்டு செய்யும் பொதுநல விலங்கு ஆவை போர் நடைபெற்றால் துன்புறும் என்ற பெரு நோக்கோடு கவர்ந்து வரச் செய்தனர் போலும். அவ்வாறு பசுக்களைக் கவர்ந்தலமயின் மூலம் பகையரசன் ஆற்றலின்மை எளிதிற் உணரப் பெறும். அடுத்து வஞ்சி சூடியோ, உழிஞை சூடியோ போருக்குப் படையெடுத்து வருவர். போர் நடைபெற்று முடிவில் வென்ற மன்னர் வாகைப்பூ சூடுவர். இதுவே ஒரு போர் எல்லைப்.

ஆனிரைகளைக் கவருகின்ற முறையைப் சங்ககாலப் போர் முறையின் குறிக்கோள் என்று எவ்வாறு கூறலாம்? இவ்வாறு ஒரு வரலாற்று விற்பன்னர் கூறுகிறார்.

அது மட்டுமல்லாமல், பசுக்களைக் கொண்டு போதலே பல (நாடுகளுக்கு) பகுதிகளுக்குப் போர் ஏற்படுதற்குக் காரணமாக இருந்தது என்கிறார்.

ஆனிரை கவர்தல் என்பது போரின் தொடக்க நிகழ்ச்சியே தவிர, ஒரு குறிக்கோள் ஆகாது. போருக்குரிய குறிக்கோள் எதுவாக இருக்கும்? என்ற வினா எழலாம். அதற்கேற்ற விடைகளையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன போரின் குறிக்கோள் பொதுவாக-புகழ் தேடவும்-புகழை நிலை நிறுத்தவும் என்று கூறலாம்.

"தண்டமிழ்ப் பொதுவெனப்
பொருஅன் போரெதிர்ந்து"

(புறம்-51)

'தமிழ்நாடு பொதுவானது என்று ஒரு மன்னன் கூற, அதைக் கேட்கப் பொறுக்காத மன்னன் போர் எடுத்தான்' என்பதை அறியும்பொழுது நாட்டுப்பற்றுக் காரணமாகப் படை எடுத்துப் பெருமை பெற்றிருக்கிறான் இங்கு குறிக்கோள் நாட்டுப்பற்று

"ஒருவனை ஒருவன்
அடுதலும் தொலைதலும்
புதுவதும் அன்று,
இவ்வுலகத்து இயற்கை"

(புற-76.)

போர்கள் நடைபெறுவது இயல்பு என்கிறார் மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு முயற்சி செய்யும்பொழுது பிறரை எதிர்க்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. அதனாற்றான் "இயல்பு" என்கிறார். எனவே இங்கு குறிக்கோள் முன்னேற்ற முயற்சி.

"வையங் காவலர்
வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப்
பொதுச்சொற் பொறுது
இடம் சிறிது
என்னும் ஊக்கந்துரப்ப
ஒருங்கா வுள்ளம்"

(புறம்-?)

உன்னுடை நாடு மிகச் சிறிது என்று கேலி பேசுவோரை அடக்குதற்குப் போர் எடுத்திருக்கிறான். அடக்கமாய் வாழ்பவனைப் புலியாக்கினால் பாயத்தான் செய்வானே தவிர-பசுவாக மாறிவிடுதல் மறவர் மரபாகாது. இங்கு குறிக்கோள்: தன்மானம் காத்தல்.

இவையே அன்றித் திரை கொடுக்க மறுப்போர் மீது எடுத்த போரைக் கலிங்கத்துப் பரணி பாடுகின்றது.

எனவே அந்த வரலாற்று விற்பன்னர் கருதுமாப்போல, பசுக்களைக் கவருதல் போர் ஆகாது; அதன் காரணமாகப் பகை உணர்ச்சி ஏற்பட்டது என்பதும் ஏற்பதற்கில்லை. அந்த வரலாற்று விற்பன்னர் புறப்பொருள் வெண்பா மாலையை காட்டாகக் குறிக்கிறார். அப்படியே தொல்காப்பியத்தை மறந்து விடுகிறார்.

"Lifting neighbouring cattlea was one of the objects of ancient warfare. This was a bone contention between several belligerent states. It was lhc basis of many a war in dreaivian India."

"The Aims and war"-போரும் அதன் குறிக்கோள்களும் என்ற தலைப்பில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: ஆனால் தொல்காப்பியம் கூறுகிறது.

"வேந்துவிடு முனைஞர்
வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல்
மேவற்று ஆகும்"

(தொல்-பொருள். 60)

வேற்றரசன் எல்லைப்புறத்தில் உள்ள பசுக்களைக் கவர்ந்து பாதுகாத்தல் வெட்சித் திணையாகும் என்கிறார். இதற்குக் குறிக்கோள் 'பசுக்களைப் பெற வேண்டும்' என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? மேலும் இதுவே தமிழகத்தில் பல போர்களுக்கு நிலைக்களனாக இருந்தது என்பதை எவ்வாறு ஒப்ப முடியும்? ★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரையோ அவர் மொழியையோ அளவிறந்து வெறுப்பதற்குக் காரணம். இதனால், ஆங்கிலரை மட்டுமன்றி, அவரை நடுநிலையாய்ப் போற்றுபவரையும் தூற்றுவது அவர் வழக்கம். இவ்வழக்கப்படியே, தம் கருத்திலெழுந்தவாறு கைக்கு வந்ததைக் கிறியுள்ளார் கீரனார்.

ஆங்கிலர்மீது எத்துணை வெறுப்பிருப்பினும், 1924-ஆம் ஆண்டு தம் 24-ஆம் அகவையில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வு தேறியதிலிருந்து இரவும் பகலும் வரலாறு, மொழிநூல், மாந்தனூல்

ஆகிய முத்துறையிலும் நூற்றுக்கணக்கான நூல்களைக் கற்றுவரும் பாவாணரோடு போட்டியிட்டு 'ஞானியாராடும் திருக்கூத்தில் நானும் ஆடுகிறேன் தெருக்கூத்து" என்பதாய், அரங்கின்றி வட்டாடுவதுபோல் நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொள்ளற்க நம் கீறனார் எனத்தகும் கீரனார்.

பழமொழிகள் தமிழில் இல்லையென்று பாவாணர் சொல்லவில்லை. அவரே மூவாயிரம் தொகுத்து வைத்திருக்கின்றார். ஆங்கிலத்திற்போல் எழுவகைப் பாகுபாடு செய்யவில்லை என்பதே அவர் கூற்று.

பண்டைத் தமிழகக் குடவோலை முறை பாவாணர்க்குத் தெரிந்ததே. ஆயின், அது திருவுளச் சீட்டு முறை. இன்று ஆங்கிலர் கையாள்வது 21 அகவை வந்த ஒவ்வொருவரும் தம் கருத்தைத் தெரிவிக்கும் தேர்தல் முறை இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டைப் பாவாணரது 'பழந்தமிழாட்சி' என்னும் நூலிற் கண்டு தெளிக.

தமிழிற் சொல் வளமில்லை என்பது பாவாணர் கருத்தன்று. ஆங்கிலம் பல்வேறு மொழிகளினின்று கடன் கொண்டிருப்பதனாலும், எத்துணையோ கலைகளைத் தன்னகத்துக்கொண்டிருப்பதனாலும், உலக மொழிகள் எல்லாவற்றுள்ளும் மாபெருஞ் சொல்வளம் உடையதாகும். vote, Bollot என்னும் இரு சொற்கட்கும் தமிழில் குடவோலை என்ற ஒரு சொல்லே உண்டு. வாக்கு என்பது வாய்ச் சொல் என்று பொருள்படும் வடசொல்.

பொருளிலக்கணத்தில் அகமும் புறமும்பற்றி வரும் குறியீடுகளெல்லாம் தமிழுக்குச் சிறப்பே. ஆயின், ஆங்கிலத்தில் ஒவ்வோர் அறிவியல் நூலினும் ஆயிரக்கணக்கான சிறப்புக் குறியீடுகள் உள்ளனவே. எடுத்துக்காட்டாக மாந்தனூல், சட்ட நூல் என்பவற்றைக் காண்க.

கவிபாடும் பொற்சிலைகள்
கதை பேசும் சித்திரங்கள்
மணக்கும் பொன்மலர்கள்
மனங்கவரும் கற்பனைகள்

நீங்கள் பார்த்த துண்டா?

கண்ணைக் கவர்ந்து கருத்தை யள்ளும்
எண்ண எண்ண இன்ப மணங் கமழும்
அற்புதப் பொன்மலராக உருவாகிறது

தென்றல் பொங்கல் மலர் 1961

உள்ளத் துடிப்பில் எழும் உணர்ச்சி வேகங்களைச் சித்திரிக்கும் அற்புத ஆற்றல்படைத்த தமிழ்நாட்டின் சிறுகதை எழுத்தாளர்கள் மலரில் எழுதுகிறார்கள்.

காலப் போக்கிற்கொப்ப, நாட்டுக்குத் தேவையான அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கொணர்ந்து வழங்கி மகிழுகின்ற பெரும் பேராசிரியர்கள் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைத் தென்றல் பொங்கல் மலரில் வெளியிட இசைவு தந்துள்ளார்கள்.

பொங்கல் மலரை வண்ணமலராக்கிக் காட்ட உறுதியெடுத்துக்கொண்டு ஓவியர்கள் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கருத்தும் கவர்ச்சியும் நிறைந்ததாக மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது. மற்றவிவரங்கள் பிறகு.

4-ம் பக்கத் தொடர்ச்சி

குக்கு என் காதலி.

"நீங்கள் பார்த்தீர்களா என் அண்ணன் வந்ததை ?'' என்றவள் ஆச்சரியத்தால் தன் வாயில் விரலை வைத்துக் கடித்தாள்.

''ஆமாம்...நான் அகப்பட்டிருந்தால் இந்நேரம் இறந்திருப்பேன்'' என்று அமைதியாகவே அவளைப் பார்த்துக் கூறினேன், அவள் ஒன்றும் பேசவில்லை. அவளுடைய கண்கள் தான் பேசின.

அன்று இரவு எனக்கு உணவு கொடுத்துவிட்டு, குக்கு என்றும் போல் படுக்காமல் வெளிக் கதவோரம் உட்கார்ந்து கொண்டிருந்தாள். நான் உணவைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தேன். அவள் அங்கேயே உட்கார்ந்து சொண்டு வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். புரண்டு படுத்தேன். தூக்கம் வரவில்லை. அவளுக்காக இரங்கினேன். எழுந்து அவளிடம் வந்தேன்.

''ஏன் ? என்ன வேண்டும்'' என்றுள்.

''ஒன்றுமில்லை நீ சாப்பிட்டாயா ?'' என்றேன். பேசவில்லை அவள் தன் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்.

''எனக்காகக் காவல் இருக்கிருயா ?'' என்றேன். மெல்லத் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அதில் ஆசை, ஆவல் இரண்டும் இரண்டறக் கலந்து நின்றன.

''எழுந்து போய் நீ சாப்பிட்டால் தான் நான் படுப்பேன்'' என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

''வேண்டாம், வேண்டாம் நான் சாப்பிடுகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்தாள். நான் என் படுக்கையில் போய் அமர்ந்தேன். குக்கு சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, கதவை இழுத்து மூடிவிட்டு வந்தாள். எனக்குத் தூக்கம் வரவே இல்லை. நெஞ்சு படபடத்துக்கொண்டிருந்தது.

''குக்கு'' ஆஹா எவ்வளவு இனிக்கப் பேசுகிருள். ஏன் அவ்வளவு அன்புடன் என்னைக் கவனிக்கிருள் ? என்னைக் காதல்...உடல் வலியையும் மறந்தேன் ! புரண்டு புரண்டு படுத்தேன். அவள் நினைவு என்னை விட்டுப் போகாமல் சுற்றிச் சுற்றி வந்தது. மெல்ல எழுந்து உட்கார்ந்தேன். அவள் படுத்துக்கொண்டு விட்டாளா? அவள் படுக்கையை நோக்கினேன். குக்கு தூங்கவில்லை அவள் படுக்கையில் உட்கார்ந்துக்கொண்டு என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்! எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சிரமப்பட்டுச் சமாளித்தேன்.

''இன்னும் நீ தூங்கவில்லையா குக்கு? என்றேன் அவள் ஒன்றும் பேசவில்லை.

''கொஞ்சம் தண்ணீர் வேண்டும்'' நான் கேட்டேன் அப்பொழுதும் ஒன்றும் பேசாமல் எழுந்து போய் ஒரு குவளையில் நீர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அவள் படுக்கைக்குத் திரும்பினுள்.

''குக்கு'' என்று மெல்ல அழைத்தேன். அப்படியே நின்று திரும்பி ஒரு முறை என்னைப் பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டாள்.

''உன்னுடைய அண்ணன் பெயர் என்ன'' சம்பந்தமில்லாமல் கேட்டேன். அவளைப் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே அப்படிக் கேட்டேன்.

''ரவீந்தர் !''

''ரவீந்தர்...ரவீந்தர்தான் என்னை அடித்து ஆற்றில் போட்டவன் !'' நான் எதிர்பார்த்ததுபோல் அவள் அதிர்ச்சியடையவில்லை. மறுபடியும் திரும்பி என்னைப் பார்த்தாள். கண்ணீர் சொரிந்தன என்னருல் வந்தாள்.

''எனக்காக அவரை மன்னித்து விடுங்கள்'' என்றுள்.

''ஆமாம் குக்கு! உனக்காக ரவீந்தரை மட்டுமென்ன, அவன் கூட்டத்தையே மன்னிக்கலாம்! அவன் செய்த களங்கத்தை நீ கழுவி விட்டாய் குக்கு! அந்த அரிய பெருஞ் செயலால் நீ உயர்ந்துவிட்டாய்! உன்னை நான் விரும்புகிறேன் குக்கு! நீ என்னைக் கவர்ந்துவிட்டாய்! குக்கு, எனக்காக கேட்கிறேன் நீ அதைச் செய்வாயா ?'' கற்சிலையானுள் அவள், பேசவில்லை! இன்ப ஒளி வீசும் கண்களால் என்னை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''குக்கு! உன்னை நான் காதலிக்கிறேன். உன் பேரழகு மட்டுமல்ல என்னை கவர்ந்தது! உன் அன்புப் பார்வையும், ஆசை மொழியும், களங்கமில்லாத் தூய உள்ளமும், என்னைக் கவரும் காந்த சக்திகளாயின! என்னை உன்னிடம் ஒப்பித்துவிட்டேன்! அன்று. என் உயிரைக் காத்தாய்! இன்று என் உள்ளத்தில் உண்டான காதலைக் காப்பாயா ? குக்கு காப்பாயா?'' அவள் முகம் மலர்வதைக் கண்டேன். ஆனுல் அவள் விழிஇரண்டும் மூடி இருந்தன. அந்தமோன நிலையின் ஆழம் யார் அறிவர் ?

''என்ன குக்கு! எனக்கு உன் உள்ளத்திலே இடமில்லையா ?'' விடை எதுவோ என்று எதிர்பார்த்தது என் மனம்.

''நீங்கள் தூங்குங்கள் காலையில் அண்ணன் வரட்டும் முடிவு செய்யலாம்'' என்ன பேசுகிருள். ஒருவேளை புரியவில்லையா ? புரிந்துதான் கேலி பேசுகிருளா ? ஒன்றும் தெரியவில்லையே! வருவது வரட்டும் என்று துணிந்தேவிட்டேன். எட்டி அவள் கையைப் பிடித்துக்கொண்டேன்.

''உண்மையை முடிவாகச் சொல் குக்கு! உன் உள்ளத்தைத்தான் கேட்கிறேன்! உன் அண்ணனின் முடிவையல்ல ? அது என்னைக் கொன்றுவிடும் !'' நீண்ட மௌனத்திற்குப் பின் பசினுள்.

''உங்களை அடைய நான் கொடுத்து வைத்தவள். உங்களுடையஉயர்ந்த குணம் என்னை உங்களிடம் எப்போதோ சேர்த்துவிட்டது. உங்களைக் காணும் போதெல்லாம் என் உள்ளக் களிப்பை என்னுல் கூற முடியவில்லை''

''குக்கு...!'' அவளுடைய கரங்களை என் மார்பிலே அணைத்துக் கொண்டேன். 'குக்கு! இனி உன் அண்ணனிடம் அகப்பட்டு உயிரை விட்டாலும் கவலையில்லை'' என் உள்ளம் இன்பகீதம் எழுப்பித் தெம்மாங்கு பாடியது.

''சரி படுத்து உறங்குங்கள், இறந்துவிடாதீர்கள்'' அவள் சிரித்தாள். அவள் வாய் முத்துக்கள் இரவிலே மின்னின.

''சியாம் நீ அதிர்ஷ்டசாலிதான் !'' என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டேன். அவளுடைய வாயும் இதைக் கேட்டு உச்சரித்தனவோ? அவள் வாய் முணுமுணுத்தது.

''சியாம்'' ஆம் என் பேரைச் சொல்லிக்கொண்டாள். என்னிடமிருந்து விடுவித்துக்கொண்டு போய் படுத்துக்கொண்டாள். இரவெலாம் இன்பக் கனவிலே சுழன்றேன். அந்தச் சுழலிலே குக்கு வளைய வளைய வந்துகொண்டிருந்தாள்.

மறுநாள் காலையில் நான் முன்னதாகவே எழுந்துவிட்டேன். குக்கு இன்னும் தூங்குகிருள் என்று எழுந்து அவள் படுத்திருந்த இடத்திற்குச் சென்றேன். என்ன இயற்கையழகு. இளங்கொடி, மாந்தளிர், வெண்முகில், மென்தென்றல், இளமைக் கோளம் அவள் உடலிலே அங்கமங்கமாக நின்று களி நடம்புரிந்து விளையாடின. என் கண்கள் அவள் முகத்தை நோக்கின. அவளையே பார்த்து ரசித்தன. அங்கே அவளுடைய அதரங்கள் அசைந்தன. ஆம் அவளும் என்னைப்போல் கனவுலகத்தில் சஞ்சரிக்கிருளோ இன்பபோதையில் வாய் பிதற்றுகிருள். என்ன சொல்லிப் பிதற்றுகிருள். என் செவிக்கு நன்ருகவே கேட்டது.

''சியாம், சியாம்'' என்னைத்தான் எங்கோ தேடி அலைந்துகொண்டிருக்கிருள் என்று நினைத்தேன். என் இதயம் குளிர்ந்தது! இன்பம் வெள்ளமெனப் பெருகித் துள்ளி ஆடியது!

என் பெயரை என் செவியினிக்கக் கூவியழைக்கிருள்! கைமாறு நான் எதைத் தருவது! அந்த இனிய பாடலுக்கு? வெளியே காலை உதயத்துப் புள்ளும் மற்றவையும் பள்ளுப் பாடி இசை மீட்டின! என்னையே மறந்தேன் நான். என்னை அழைத்த கனிமொழிக் கோதையின் செவ்விய அதரத்தின் ஓரத்திலே குனிந்து ஒரு முத்தம் இட்டேன். மொத்தமாக என் உடலெல்லாம் புல்லரித்தது. கவியாத்திட சொற்கள் கிடைக்கவில்லை! காவியம் பாட வாக்கியம் அகப்படவில்லை! புனையா ஓவியம் புலர்ந்தெழுந்தது!

திடுக்கிட்டு எழுந்துகொண்டாள்! என்னை அவள் அருகில் கண்டு, அச்சத்தால் தலை குனிந்தாள்! தன்னைச் சரி செய்துகொண்டாள்! குனிந்த தலையை நிமிர்த்தினேன்!

''ஏன் என்னை அழைத்தாய் குக்கு!'' என்றேன். அவள் உடல் ஒருங்கே குறுகியது நாணம் அவளை இன்னும் ஆட்கொண்டது. கனவிலே இல்லாத நாணமும், அச்சமும் நனவிலே ஏன் கொண்டாள்?

''முன்னலேயே எழுந்து விட்டீர்களா ? என்னை எழுப்பக்கூடாது ?'' என்றுள்.

''உன் இன்பக் கனவைக் கலைத்து, உன்னை நான் எழுப்பலாமா ? அந்தக் கனவில் நான்தானே வந்தேன்''

மேலும் அங்கே இருக்கவில்லை. எழுந்து மற்ற வேலைகளைச் செய்தாள். எனக்குக் கட்டுகளை அவிழ்த்துவிட்டுப் புதிய கட்டுகளைக் கட்டினுள்! என் உடலிலும், உள்ளத்திலும் என்றுமில்லாத தெம்பும், உற்சாகமும் கரை புரண்டது.

அன்று மாலை நேரம் வந்தது குக்குவும் நானும் வீட்டை விட்டு அடர்ந்த மலர்ச்சோலை ஒன்றுக்குச் சென்றோம். அவள் புள்ளி மானெனத் துள்ளி ஓடுவாள் நான் பாயும் புலியெனத் துரத்திப் பிடிப்பேன். வானம்பாடியாகப் பறந்து ஓடுவாள். வல்லூருக நான் பறந்து பிடிப்பேன். மலர்ச்செடியிடையே மறைவாள், மனம் பதைத்துத் தேடுவேன். மின்னலெனத் தோன்றுவாள், மோகனப் புன்னகைக் காட்டுவாள், போதையூட்டி நிற்பாள். கைப்பற்றினுல் துள்ளுவாள். கை நழுவினுல் துள்ளியோடுவாள். இருவரும் ஒரு மேட்டு உச்சக்குச் சென்றோம். இன்னும் பல பல மலைகள் இருந்திருந்தாலும் சென்றுகொண்டே இருந்திருப்போம். அந்த மேட்டின் மேல் இனிச் செல்ல முடியாததால் நின்றோம்! நாற்புறமும் பச்சைப் பசேலென வளர்ந்திருந்த செடி கொடி, மரங்களைத் தழுவித் தென்றல் தன் தலையசைத்துக்கொண்டிருந்தது. அந்தி மறைந்து இருள் சூழ்ந்து வந்தது. அந்த இருண்ட எங்கள் இன்பபுரிக்கு விளக்கேற்றியதுபோல் தாரகைகள் கண் சிமிட்ட ஆரம்பித்தன. தனிமை எங்களைக் கண்கட்டி விளையாடியது.

''குக்கு''

''உம்''

''நம் காதலுக்காக உன் அண்ணனையும் இழக்க நேர்ந்தால் துறந்து விடுவாயா ?''

''காதலை இழந்து தங்களையும் இழக்கமாட்டேன. என் அன்புக்குரிய அண்ணனையும் துறக்கமாட்டேன். இருவருமே எனக்கு இரண்டு கண்கள் நான் எதை இழப்பேன் ?''

''வீண் எண்ணம் உனக்கு, நாங்கள் இருவரும் சந்தித்தால் யாராவது ஒருவர் இறந்துவிடுவோம்''

''அப்படி நேருவதாயிருந்தால் நான்தான் முதலில் இறப்பேன்.

''குக்கு! நீ...நீயா இறக்க வேண்டும் ? இந்த இன்ப நேரததில் நமக்கு சரிபாதி துன்பமும் கலந்துதான் இருக்கிறது! உன்னை நான் இழக்கவே மாட்டேன் குக்கு!'' அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டேன்.

''சியாம் காட்டிலே செழித்து மணம் பரப்பிக் கிடந்த முல்லையாக இருந்தேன். என்னை நுகர்தற்கு யாருமில்லாத, பயனில்லாத மணமுள்ள மலராயிருந்து என்ன பயன் ? உங்கள் வரவால் என்னுடைய பயனை நான் அறிந்தேன்! இனி நான் காட்டு மல்லி அல்ல! உங்கள் கைகளில் இருந்து, உங்களுக்கு மணம் வீசும் பயனுள்ள முல்லை நான்! உங்களால் என் வாழ்வின் பயனை அடைந்து விட்டேன் !''

''குக்கு!''

''சி...யா...ம்...''

கொடியிடையாள் துவண்டு என் தோள்களிலே விழுந்து விட்டாள். தென்றல் தாலாட்டியது! வானத் தாரகைகள், எங்கள் இன்ப விழாவிற்குத் தோரணங்களாக அமைந்தன. கருநீல வானம் எங்களுக்குப் பந்தலானது. இன்பக் கடலடியில் மூழ்கி விட்டோம்! வீட்டையும், விரிந்த இவ்வுலகையும், மறந்தோம்! எங்களைத் தவிர வேறுயாருமற்ற ஏகாந்தமான களிப்புக்கடலில் மூழ்கி, இன்ப முத்தெடுத்துக் கொண்டிருந்தோம்!

நாங்கள் வீட்டுக்கு வரும்போது இரவு பதினெருமணி யிருக்கும். அந்த நடுககாட்டில், எங்களைக் கேட்பாரும், பார்ப்பாரும் இல்லாமல் ஆடிப்பாடி வீடுவந்து சேர்ந்தோம்!

(தொடரும்)

வெண்பாப் போட்டி

புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

முன்னந் தமிழ்வளர்த்த மூத்த தலைமுறையில்
பொன்னனைய வெண்பாப் புலியாக ; - கன்னற்
கலைமலிந்த தென்றலிலே காணின்று வெண்பாப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—இ. சரசுவதி, நோவிலூர்.

புலைமொழியா மிந்தி புகழ்மொழியா மெங்கள்
கலைத்தமிழை ஆளப் புகுமோ ? - உலகில்
எலிக்கஞ்சும் பூனையுண்டோ ? உண்டோ நரிக்குப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல் ?

—பாப்பா, காமாட்சிபுரம்.

ஆழிசூழ் வையமெலாம் ஆண்டோர், வடவர்க்கு
ஊழியராய்க் கைகட்டி உய்வாரோ ? தோழீ !
வலியொடுங்கிப் போய்விடினும் வாழ்நாளில் இல்லை
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—இரா. செந்தமிழ்ச்செல்வி, வீரபாண்டி.

கொழுமுறி போலும் இளமேனி ; கோல
முழுமதி போலும் பனிமுகம் ; - காதல்
அலவநோய் தந்நாள் முகம்நோக் கியோவம்
புலிநடுங்கித் தஞ்சம் புகல் !

பி. கே. பச்சையப்பன், காமாட்சி புரம்,

வென்று புகழ்தேக்கி வீரமொடு அந்நாளில்
நன்ருக வாழ்ந்திருந்த நற்றமிழர் - இன்று
அலைகடலுக்(கு) அப்பாலே அல்லலுறும் காட்சி
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

தி. குமாரராசு, சென்னை-1.

சீறும் புலியைச் சிறுமுறத்தால் அந்நாளில்
வீறுகொண்டே பெண்ணும் விரட்டினு ளென்ருல்
வலிவுகொள் செந்தமிழர் வாழ்வினி லுண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—இர. வெங்கடேசன். சென்னை-2

பண்ணிசைத்துக் காதற் பறவை வரக், கண்டேன்
வெண்மதிக்குப் போட்டியென மேவியவர் - பெண்ணுள்
குளிர்வதனம் கண்டு குறைசால் பிறையம்
புலிநடுங்கித் தஞ்சம் புகல் !

—சா. நடராசன், சென்னை-1

நடக்காத காரியத்தை நம்நாச்சி யப்பன்
இடக்காகச் சொல்கின்ருர் ஈற்றடியில் என்பேன் !
எலிநடுங்கும் பூனை எதிர்வந்தால் ! உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—அர தமிழன்பன், விருத்தாசலம்.

கூர்வாளைத் திண்தோளைக் கொல்லவரும் மல்லர்தம்
வேற்படையை, வில்லம்பை வெல்லும்தார் - மார்பன்
வலையொடுங்கும் மீனேபோல் வஞ்சியிடம் வீழ்தல்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—புதுவை இரத்தினசனுர்த்தனன், தாம்பரம்.

போரின்றி நாடில்லை பொங்கியெழு தாயகமே !
வீறுகொண்டால் வெற்றி ; விடுதலையே ! - சோர்ந்தே
கிலிகொண்டால் கீழ்நிலையே சுண்டெலிக்கோ வேங்கைப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

— புதுவை வைத்தியநாதன், ஆமதாபாத்-8

சேரன் "வில்" வெள்ளிமலை மீதிலங்கத் தெண்பாண்டி
வீரம் "கயல்" விளக்கி நிற்க ; வெம் - போரில்
எலிவடவர் வெல்வதுண்டோ ? உண்டாமோ சோழன்
'புலி'நடுங்கித் தஞ்சம் புகல் ?

—மு. வரதராசன், துறையூர்.

தென்றமிழ் காத்திடத் தீரர் எழுந்திட்டால்
குன்றசையும் வான்சுற்றும் கோளழியும் - பொன்வளையாய்
ஆலிலைவேற் செந்தமிழர் அஞ்சுவரோ ? உண்டோ ?
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—க. துரையரசன், வேலாயுதபாளையம்.

ஏடா தமிழா ! எட்டா எடுவாளை
பாடாய்ப் படுத்துது பாழ்வடக்கு - போடா
பொலிவழிந்த பின்பும் பொறுமையோ ? நன்ரே
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

வி பாலசண்முகம், புரசை, சென்னை-7

செந்தா மரைமுகத்துச் சேர்பவளம் முத்துடனே
விந்தைபல காட்டும் விழிமலரும் - எந்தம்
தலைவிகொண்டாள் என்றுடைந்தோ தண்காருள் வான்'அம்
புலி'நடுங்கித் தஞ்சம் புகல் ?

—பூ ச. கந்தசாமி. சென்னை-1

தூக்குக் கயிற்றெனினும் துஞ்சி மடிந்திடுவர்
வாக்குப் பிறழார்நல் வாய்மையரே - நோக்கின்
எலிநடுங்கித் துஞ்சும் அதன்வளையில் ; உண்டோ ?
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

- பிரான்சிஸ், சென்னை-10

நிலைமறந்து நாட்டினுள் நீள்துயில் கொண்டோர்
வலியுணர்ந்து தன்மானம் பெற்ருர் - தெளிவீர்
வலியடங்கிக் காட்டில் வசித்திடினும் உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—முருகு. தமிழரசன், அம்பத்தூர்,

எல்லைக்(கு) இமயத்தை ஏற்ருண்ட நம்தோழர்
தொல்லைக்(கு) இணையாகித் தூங்குவதோ ? - இல்லை
கழிகாட்டித் தாக்கியதும் காண்பீர் வடக்குப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—பாகை. சோ மு. கருப்பையா சென்னை-5

முறைக்களிற்றைத் தாக்கி முடியீனும் தந்தம்
'பிறை'க்கெனவே போர்த்துவரும் பேரான் - 'அறை'க்குள்
வலியடங்கி மான்வஞ்சி மார்மீது சாய்தல்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—சௌதாராணி, மதுரை-4

ஈயென்ருல் ஈவர் எதிர்த்துவரின் தூள்செய்வர்
'ஆய்,அன்ன வண்டமிழர் ; அத்திறத்தார் - பாயா
பலிநடுங்கல் உண்டோ பகைவர் மேல் ? உண்டோ,
புலிநடுங்கித் தஞ்சம் புகல் ?

—ச. வடிவேலன், வேலாயுதபாளையம்.

பகைகொண்டார் ; காசு பலங்கொண்டார் ; கேட்டால்
அடைக்கச் சிறைகொண்டார் ; ஆருும் - வடக்காம்
ஒலிகேட்கும் நாள்வரட்டும் ; ஓடவைப்போம்; உண்டோ !
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—வி. சண்முகவடிவு, காரைக்குடி.

தொன்மைத் தமிழகத்தே தோன்றிய நல்லறிஞர்,
பன்மையாய்த் தம்பி பலரிருக்க - மன்னும்
வலியிருக்கப் பொல்லா வடவரிடஞ் சாய்தல்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—கு. சி. இராம. இராசங்கம், "சிங்கம்புணரி"

வாள்கொண்டு வெட்டி ! வளமில்லா இந்திக்காய்
"ஆள்தூக்கிச்" சட்டமே வந்தாலும் - பாழ்த்த
கிலிகொண்டு தென்னர் பணிவாரோ ? உண்டோ
புலிநடங்கித் தஞ்சம் புகல் ?

—"ஊஞ்சாப்பட்டியான்"

அடுபகை தோன்றின் அறத்தமிழர் வாளை
எடுமெனவே தாக்கி எதிர்ப்பர் - படைதான்
நலிவுறக் கண்டும் நடக்குமோ வீரப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

—பொன்னன், ஆற்காடு.

தென்றலில் உண்டோ தணல்வெம்மை : புன்முதுமை
பொன்தமிழுக் குண்டோ புகன்றிடுவாய் :- என்றும்
ஒலிகடல் ஓய்ந்திருத்தல் உண்டோ, சொல் ; உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல் !

—சாலிராசன், திருபணி.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510,